# வடபிராந்திய ஊடகத்துறையில் பெண் ஊடகவியலாளர்கள்: தொழிற்றுறை சார்ந்த சவால்கள்

**விஜயதர்சினி தினேஸ், சிவசுப்ரமணியம் ரகுராம்**
thivijathinesh@gmail.com, s.raguram@univ.jfn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கையில் தமிழ் ஊடகப்பரப்பில் கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகங்கள் ஒருபுறமிருக்க, வடமாகாணத்தை மையப்படுத்தியதாக பிராந்திய ஊடகப் பரப்பொன்றும் பல ஆண்டுகளாகவே வளர்ச்சி பெற்று வருகின்றது. இது தனக்கே உரித்தான சிறப்பியல்புகளையும் கொண்டிருக்கின்றது. கொழும்பை மையமாக வைத்திருக்கக்கூடிய தமிழ் ஊடகத்துறை என்பது தேசியரீதியில் அரசியல், பொருளாதார, சமூக விடயங்களைக் கையாளும்போதும், அங்கு பணியாற்றக்கூடிய ஊடகவியலாளர்கள் ஒருவகையில் தொழில்சார் தகைமைக்குள் உள்வாங்கப்பட்டிருக்கும்போதும், வடக்கை மையப்படுத்தியதான பிராந்திய ஊடகத்துறை என்பது ஒப்பீட்டளவில் தொழில்சார் தகைமைகளில் தனக்கேயுரித்தான பல்வேறு சந்தர்ப்பங்களையும் சவால்களையும் கொண்டிருக்கின்றது. இது ஊடகத்துறையில் வளங்கள், வாய்ப்புகள், பிரதிநிதித்துவம், சித்திரிப்பு மற்றும் பெண்களின் பங்களிப்பின் அடிப்படையில் வலுவான வடக்கு மற்றும் தெற்கு வேறுபாட்டை பிரதிபலிக்கிறது. வட பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்ட பெண் ஊடகவியலாளர்களின் வாய்ப்புக்கள் மற்றும் சவால்களை தனிப்பட்டவை, பணியிடம், சமூகம் என்ற மூன்று அடித்தளங்களிலிருந்து நோக்க முடியும். இதனை மேலும் ஆராய்வதற்காக, வடபிராந்தியத்தில் பணியாற்றும் முழுநேர மற்றும் சுயாதீன பெண் ஊடகவியலாளர்கள் 20 பேர் மாதிரிகளாகக் கொள்ளப்பட்டனர். ஆய்வில் அளவறிதலானது மூன்று நிலைமைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட பிராந்தியத்தில் இருக்கும் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் பணியாற்றிய - பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய பெண் ஊடகவியலாளர்களது தனிப்பட்ட ஆழமான நேர்காணல், வினாக்கொத்து மற்றும் குவிமையக் கலந்துரையாடல் ஆகியவற்றினூடாகத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. பெண் ஊடகவியலாளர்கள் தனிப்பட்ட ரீதியாகவும், பணியிடம் மற்றும் சமூக அளவிலும் சவால்களையே அதிகம் கொண்டுள்ளனர். ஆய்வின் கண்டுபிடிப்புகளின்படி, வட பிராந்திய பெண் ஊடகவியலாளர்கள் பணிநிமித்தம் உளவியல் ரீதியாக மகிழ்ச்சி, சரியான நேரத்தில் சம்பளம், ஓரளவுக்குப் பயிற்சி மற்றும் தொழில்விருத்தி வாய்ப்புகள், நிறுவனத்திற்கு வெளியே ஓரளவு சுதந்திரமாக செயற்படும் வாய்ப்பு, ஊடகக் கல்வியில் திருப்தி, செய்தி சேகரிப்பில் குறைந்தளவிலான சட்ட மற்றும் அணுகல் சவால்கள் போன்ற வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். இருப்பினும், ஊடகப் பணியைத் தொடர்வதில் குடும்பத்தாரின் ஆதரவின்மை, திருப்தியற்ற ஊதிய உயர்வு, தொழில்சார் அச்சுறுத்தல்கள், பால்நிலை வேறுபாடுகள், பதவி உயர்வு குறித்த அதிருப்தி மற்றும் நிறுவனத்திற்குள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை போன்ற குறிப்பிடத்தக்க சவால்களையும் அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்பது ஆய்வுவழி வெளித்தெரியவந்தது.

**திறவுச் சொற்கள்:** பெண் ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடகவியல், வடபிராந்திய ஊடகத்துறை, தொழில்வாண்மை.

**ஆய்வின் அறிமுகம்**

உலகநாடுகளுடன் ஒப்பிடுகையில் தொழில் வாண்மைத் தளத்தில் ஊடகச்சூழல் இலங்கையில் இன்றும் கேள்விக்குரியதாகவே அமைந்துவருகின்றது. எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பின் (Reporters Without Borders-RSF)2024உலகபத்திரிகைச்சுதந்திர அட்டவணையின் பிரகாரம், இலங்கை 180 நாடுகளில் 150வது இடத்திற்கு படுமோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை முந்தைய ஆண்டில் 135வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் பணியாற்ற முடியாத மோசமான சூழலை இது காட்டுகிறது. உலக நாடுகளுடன் ஊடகத்துறை சார்ந்து ஒப்பீட்டளவில் இலங்கை மட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களை வழங்கக்கூடிய நாடாகவும் இருக்கின்றது.

மிகக்குறிப்பாக, யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இந்நிலை தீவிரமடைந்திருக்கின்றது. யுத்தம் நடைபெற்று முப்பது வருட காலப்பகுதியில் யுத்தத்தின் வெவ்வேறு பரிணாம காலங்களில் இவை நடந்தேறின. குறிப்பாக, யுத்தத்தின் பிற்காலத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டும் கடத்தப்பட்டும் கொலைசெய்யப்பட்டதுமான சம்பவங்கள் அதிகம இடம்பெற்றன. 1995 இற்குப் பின்னர் இந்நிலை மிகத் தீவிரமடைந்தது என்பதனை கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டுகின்றது. கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை, கொலை செய்யப்பட்டமை ஊடக நிறுவனங்கள் மூடப்பட்டமை, ஊடக நிறுவனங்கள் எரியூட்டப்பட்டமை இலங்கை ஊடகப்பரப்பில் அதிகமாகவே நிகழ்ந்துள்ளன. இந்நிலை ஊடகச் சூழலில் வாய்ப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தி, ஊடகத்துறையை மிகப் பெரும் சவாலுக்குரிய தொழிலாகவே மாற்றியமைத்திருக்கின்றது. (மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், அறிக்கை, 2006:1)

ஆரோக்கியமான ஊடகத்துறை வாய்ப்புக்கள் குறைவானதாகவும் சவால்கள் நிறைந்ததாகவும் அமைந்துள்ளதென்பதை எழுத்துக்களுக்காக மரணிக்கப்பட்டும் அச்சுறுத்தப்பட்டும் கடத்தப்பட்டும் இருக்கக்கூடிய ஊடகவியலாளர்கள் எண்ணிக்கை சுட்டிக்காட்டுகின்றது. யுத்தம் முடிவுற்ற போதிலும் குறிப்பாக, வடபிராந்திய ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்படுவதும், காணாமலாக்கப்படுவதும் தொடர்ந்தவாறே இருப்பதாக, சுதந்திர ஊடக இயக்கத்தின் வருடாந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு கொல்லப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க தான் கொல்லப்படுவதற்கு முன்னர் எழுதிய "இராணுவத்தைத் தவிர வேறு எந்தவொரு தொழிலிலும் தொழில் நிமித்தமாக அந்த தொழில்புரிபவரின் உயிரைப் பலியாக கேட்பதில்லை. இலங்கையில் இந்தவகையில், பத்திரிகைத் தொழிலிலும் இருக்கின்றது..." என்ற வரிகள் இந்த அசாதாரண ஊடகச் சூழலை உறுதிப்படுத்துகின்றன. (கீதாரஞ்சனி,2011: 34)

எவ்வாறாயினும், கடந்த காலங்களோடு ஒப்பிடுகையில் அண்மைக்காலங்களில் இலங்கையில் ஊடகத்துறைசார் வாய்ப்புக்கள் ஓரளவு அதிகரித்து வருகின்றன, அச்சுறுத்தல்களும் குறைந்திருக்கின்றன. ஊடகத்துறையை நோக்கி இளவயதுடையோர் நாட்டம் காண்பிப்பது அதிகமாக இருக்கின்றது. ஊடகத்துறை சார்ந்த கற்கைநெறிகள் பல்கலைக்கழக மட்டத்திலும், நிறுவனங்கள் மட்டத்திலும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஊடகத்துறைசார் ஆய்வுகள் கல்விசார் ஆய்வுகளாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது ஒருபுறமிருக்க, ஆண்மையக் கட்டமைப்புள்ள சமுதாயத்தில் பெண்கள் தமக்கான இடத்தைத் தக்கவைப்பதற்கு கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. வீட்டுப் பெண்களாக இருந்தவர்கள் இன்று ஆசிரியத்துறை, வங்கித்துறை, மருத்துவத்துறை எனப் பல்துறைகளிலும் பரவி, ஊடகத்துறையிலும் தமக்கான இருப்பைப் பெற்றுள்ளனர்.

ஆனாலும், இவர்களுக்கான வாய்ப்புக்களும் பதவியுயர்வுகளும் அனுபவம், உற்பத்தித்திறன், ஆற்றல் மற்றும் பணியாற்றல்

என்பவற்றின் அடிப்படையில் அமையாது, பால்நிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளமை அதிகம் அவதானிக்கப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையில் ஊடகத் தொழிலிலுள்ள பால்நிலை பாரபட்சம் தொடர்பில் 2020 இல் வெளிவந்த Media Gender Charter for Sri Lanka இன் அறிக்கை அதனைச் சுட்டிக்காட்டுகின்றது. (Media Gender Charter for SriLanka, July,2020:17)

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையைப் பொறுத்தவரையில் ஊடகத்துறையில் பணியாற்றக்கூடிய பெண்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளமையும் இதன் வெளிப்பாடே. இலங்கையில் தலைநகர் கொழும்பை மையமாகக் கொண்ட ஊடகங்களாயினும் சரி, பிராந்திய ஊடகங்களாயினும் சரி இந்நிலைமையே அதிகம் காணப்படுகின்றது. அதிலும், பிராந்திய ஊடகத்துறை குறிப்பாக வடபிராந்திய ஊடகக் களத்தின் போக்கில் அதிக கவனக்குவிப்பை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இதன் அடிப்படையில், 'வடபிராந்திய ஊடகத்துறையில் பெண் ஊடகவியலாளர்கள்: தொழிற்றுறை சார்ந்த சவால்கள்' குறித்த ஆய்வு முயற்சி காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

**முன்னைய ஆய்வுகள் மீதான பார்வை**

ஊடகத்துறை சார்ந்த ஆய்வுகள் காலத்துக்குக் காலம் தனியாட்களாலும், நிறுவனங்களாலும் தொழிற்துறைசார்ந்தும், கல்வித்துறைசார்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிலும், பெண் ஊடகவியலாளர்களுக்கான பணிப்பரப்பில் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் தென்னாசிய அளவில் அடையாளங் காணக்கூடியவையாகவுள்ளன.

டில்ரூக்ஷி ஹந்துன்நெத்தி என்பவரால் 'இலங்கையில் பணியாற்றும் பெண் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவுகள்' குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தலைப்பானது, இலங்கை ஊடகத்துறையில் பணியாற்றும் 29 வீதமான பெண் ஊடகவியலாளர்கள் தமது வேலைத்தளங்களில் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாகுகின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றது. எனினும், இவ்விடயம் குறித்து முறைப்பாடுகள் எவையும் முறையிடப்படுவதில்லை. பத்திரிகை நிறுவனங்களின் கவனிப்பற்ற தன்மை காரணமாகவே பெண் ஊடகவியலாளர்கள் முறையிடுவதில்லை என்ற விடயம் குறித்த ஆய்வின் முடிவாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும்,

ஆய்வில் பெண் ஊடகவியலாளர்கள் தொடர்பில் - ஊடக நிறுவனங்கள் மற்றும் ஒன்றியங்களில் பெண்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றது, பெண் ஊடகவியலாளர்களிடம் பால்நிலை அறிவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக போதிய விழிப்புணர்வும் பயிற்சியும் காணப்படாமை., பால்நிலை தொடர்பான செய்தி அறிக்கையிடலில் ஒரே மாதிரியான தன்மை காணப்படுதல், பெண் ஊடகவியலாளர்களின் தொழில் பாதுகாப்பு, பாலியல் துன்புறுத்தல்கள் முதலியன பெண் ஊடகவியலாளர்கள் ஊடகப் பணிகளில் தொடர்பில் எதிர்கொள்ளும் சவால்களாக ஆய்வாளர் டில்ரூக்ஷியினால் இனங்காணப்பட்டுள்ளன.

எனினும், மேற்குறித்த ஆய்வானது, ஊடக நிறுவனங்களில் பெண் ஊடகவியலாளர்களுக்கு இருக்கக்கூடிய பாலியல் தொடர்பான சவால்கள், தொந்தரவுகள், நெருக்கடிகள் தொடர்பில் மாத்திரமே ஆராய்கின்றது. பெண் ஊடகவியலாளர்களது குடும்பநிலை மற்றும் ஆதரவு, சட்ட நிலைமைகள், அவர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் தொழில் பாதுகாப்புப் பொறிமுறைகள் தொடர்பிலும் மேற்குறித்த ஆய்வில் ஆராயப்படவில்லை. இவை குறித்த ஆய்வின் இடைவெளிகளாகப் பார்க்கப்படுகின்றன.

ஜோய் சந்திரபோர்த்தி (Joy Chanraborthy), முக்றிக்கம் கசாரிகா (Muktikam Hazarika) மற்றும் அருணிமா கோஸ்வாமி (Arunima Goswami) ஆகியோரால் 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது - அசாமிலுள்ள பெண் ஊடகவியலாளர்களது ஊடகப் பங்காற்றுகை மற்றும் செயற்றிறன் குறித்த ஆய்வாக அமைந்துள்ளது. அந்தவகையில், பெண் ஊடகவியலாளர்கள் தமது தொழிலிலும் தொழில்சார் இடங்களிலும் பல்

வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளமை ஆய்வின்வழி வெளிப்படுத் தப்பட்டுள்ளது. அத்தகைய சவால்கள் நேர டியாகவும் மறைமுகமாகவும் நேரிடுகின்றன என்பதை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. செய்தியறை, பயிற்சிக்களம், தலைமைத்துவ வகிபாகம், இணக்கத்தன்மை, பெண்களை நோக்கிய குடும்ப மற்றும் சமூகச் செயற் பாடுகள், ஊடகத்துறையில் பெண்களுக் கான கொள்கைகள், வசதிவாய்ப்புக்கள் முத லியவற்றில் ஆண் ஊடகவியலாளர்களுடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கான பாகுபாடு கள் அதிகமாக இருக்கின்றன என்பதை இந்த ஆய்வு மேலும் வெளிப்படுத்தியிருக்கின்றது. (Joy Chandraborty, Muktikam Hazarika & Arunima Gowswani, 2015).

மெட்நுருஸ் ச(:.)பா (Mdnurus Safa) என்ப வரால் 2015ஆம் ஆண்டு 'பங்களாதேஷ் பெண் ஊடகவியலாளர்களுடைய சவால்கள்' என்ற ஆய்வானதுமேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆய்வானது பங்களாதேஷி லுள்ள பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்களில் பணியாற்றும் 100 ஊடகவிய லாளர்களை மாதிரிகளாகத் தெரிவு செய்து அளவை ஆய்வு முறையியலுக்கூடாக முன் னெடுக்கப்பட்டுள்ளது. ஊடக விமர்சகர்களிட மிருந்தும் நேர்காணல்கள் பெறப்பட்டுள்ளன. ஆய்வின் பிரகாரம் அணுகுமுறைகள், நியாயமற்ற வேறுபாடுகள், சக ஆண் ஊடகவியலாளர்களது பாலியல் தொந்தரவு களுக்கு ஆளாகுதல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பின்மை ஆகியன பெண் ஊடக வியலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக அடையாளங் காணப்பட்டுள்ளன. குறித்த இவ் முதுதத்துவமாணி ஆய்வின் பிரதான நோக்கம் பங்களாஷே பெண் ஊடகவியலா ளர்களது தேசிய ஊடகக் கலாசாரம் தொடர் பில் ஆராய்வதாகும். (Mdnurus Safa, 2015).

கிரேஸ் சுவான்சன் (Grace Swanson) என்ப வரால் 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'பெண் ஊடக மாணவிகளுக்கும் பெண் ஊடகவியலாளர்களுக்குமான இடைவெளி' என்ற ஆய்வானது, ஊடகக் கற்கைநெறி யைத் தெரிவுசெய்து கற்கும் மாணவர்கள் ஊடகத்துறைக்குள் தொழில் சார்ந்து பணி புரிவது குறைவாக இருப்பதற்கான காரணங் களை ஆராய்வதாக அமைகின்றது. அமெ ரிக்காவில் உள்ள ஊடக நிறுவனங்களைக் கருத்திற்கொண்டு குறித்த ஆய்வு முன் னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த ஆய்விற்கான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, நான்கு பெண் ஊடகவியலாளர்கள், பல் கலைக்கழகத்திலிருந்து வெளியேறி ஊடகத் தொழில் புரியும் ஐந்து பெண் ஊடகவிய லாளர்கள், அனுபவம் வாய்ந்த ஐந்து பெண் ஊடகவியலாளர்கள், ஊடகத்துறையிலிருந்து விலகிய ஆறு பெண் ஊடகவியலாளர்கள் ஆகியோர் நேர்காணல்களுக்கு உட்படுத்தப் பட்டனர். குறித்த ஆய்வின் முடிவாக, ஊட கங்களில் பால்நிலை சமத்துவம் பேணப்பட வேண்டுமெனவும், ஆண்களின் கலாசாரம் செய்தியறையில் மேலோங்குவது மாற்றப் பட வேண்டுமெனவும் ஆய்வாளரால் பரிந் துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (Grace swanson, 2016).

ரோஸ்மேரி என். முக்வே (Rosemary N. Mugwe) என்பவரால் 2012ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட 'கென்யாவின் ஊடகங்களில் பெண் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்' என்ற ஆய்வானது கென்யா ஊடகங்களில் பெண்கள் அதிகமாக முகங் கொடுக்க வேண்டியிருப்பதில் பால்நிலை தொடர்பான சவால்களே அதிகம் என்ற முடிவினைப் பிரதானமான முன்வைக்கின் றது. எண்சார், பெறுதிசார் முறைகளினூ டாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் கென்யாவில் இருக்கக்கூடிய கென்யா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (Kenya Broadcasting Corporation), றோயல் மீடியா ஸ்ராண்டட் குரூப் (Royal Media Standard Group), தேசிய ஊடகக் குழு (Nation Media Group) ஆகிய மூன்று பிரதான ஊடகங்கள் மாதிரிகளாக ஆய்விற்கென உள்வாங்கப்பட்டன. இவ் முதுதத்துவமாணி ஆய்வின் பிரகாரம் சில குறிப்பிட்ட பணிகள் ஊடக நிறுவனங்களில் ஆண்களுக்கே வழங் கப்படுகின்றன எனவும், பெண் ஊடகவிய லாளருக்கான வலுப்படுத்தல்கள் ஏற்படுத் திக் கொடுக்கப்பட வேண்டுமெனவும் இக்

காரணிகள் ஊடகங்களில் பெண்களைப் பங்குபற்றுவதற்கான, அவர்களை உள்ள டக்குவதற்கான தலைமைத்துவத்திற்கான மற்றும் தீர்மானமெடுத்தல் ஆகியவற்றிற்கு பெரிதும் உதவியாக அமையும் என்பதும் ஆய்வின் முடிவுகளாக அமைகின்றன. (Rosemery, N. Mugwe,2012).

'பெண் பத்திரிகையாளர்கள் கூறும் கதைகள்: தெற்காசியாவில் ஊடகங்களில் பெண்கள்' என்ற தலைப்பிலான ஆய்வறிக்கையானது தெற்காசிய ஊடக சுதந்திரம் மற்றும் ஒற் றுமைத் திட்டத்திலிருந்து கீதா சேஷுவினால் (Geeta Seshu) முன்வைக்கப்பட்டது. இவ் ஆய்வானது தெற்காசியாவிலுள்ள ஆப் கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த பெண் பத் திரிகையாளர்களை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு இலங்கை தொடர்பில், பல பெண் பத்திரிகையாளர்கள் ஆணாதிக்க ஊடகச் சூழலில் பணிபுரிந்து வருவதாகவும், தற்சமயம் பல பெண் ஊடகவியலாளர்கள் புதிய ஊடகங்களைத் தடையின்றி வழங்கும் ஒரு கருவியாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் எனவும் இந்த ஆய்வு தெரிவிக்கின்றது. பிரதான ஊடகங் களால் முன்வைக்கப்பட்ட தடைகளைக் கடக்க புதிய ஊடகங்கள் உதவும் என பெண் ஊடகவியலாளர்கள் நம்புவதாகவும், பெண் பத்திரிகையாளர்களின் ஆர்வம் மற்றும் ஈடுபாட்டிற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறு வதில்லை எனவும், ஊடக நிறுவனங்கள் மாலை நேரங்களின் பின்னர் கூட்டங் களை நடாத்தும் போக்கினைக் கொண் டிருப்பது ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு எனவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. பணியின்போது பெண் ஊடகவியலாளர் களுக்கான தமக்கு இயைபான, இலகுவான ஆடைகளுக்கும் கட்டுப்பாடுகள் நிலவுவதாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. குறிப்பாக, வடபுலத்தில் பெண் ஊடகவியலாளர்கள் பழைமைவாத அடையாளக் குறியீடுகளை கொண்டிருக்கவேண்டும்எனசமூகத்தினரால் எதிர்பார்க்கப்படுகின்றார்கள் எனவும் ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 52 வீதத்தைப் பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், பெண்களின் குரல்கள் பல சந்தர்ப்பங்களில் நசுக்கப்பட் டுக் காணாமலாக்கப்பட்டுள்ளன என ஆய் வறிக்கையின் ஊடாக வெளிப்படுத்தப்பட் டுள்ளது.

சிறீஸ்கந்தராசா துவாரகன் என்பவரால் 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'முழு நேர ஊடகவியலாளர்களும் தொழில்சார் சவால்களும்' என்ற கலைமாணிப்பட்ட ஆய் வில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலைபெற் றிருக்கக்கூடிய உதயன், வலம்புரி, யாழ் தினக்குரல், வீரகேசரி ஆகிய அச்சு ஊட கங்களை மையமாகக் கொண்டு மேற்குறித்த பத்திரிகைகளில் முழுநேரமாகப் பணிபுரி கின்ற ஊடகவியலாளர்களின் தொழில்சார் சவால்களாக பணித்திருப்தி, வேதனம், தொழில் விருத்தி, பணிநேரம் பாதுகாப்பு, பணிப்பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு, பணி சார் நீடிப்பு, உளவியற் பிரச்சினைகள் சமூகம்சார் மதிப்பீடு, பணிசார் சுதந்திரம் ஆகியன ஆராயப்பட்டுள்ளன. இவ் ஆய் வானது எண்சார் மற்றும் பெறுதிசார் ஆய் வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக் கொத்து, நேர்காணலின் மூலமாகத் தரவு கள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடி வாக முழுநேர ஊடகவியலாளர்களுக்கு வழங் கப்படும் வேதனப்பற்றாக்குறை காரணமாக பல சவால்களை எதிர்கொள்கின்றனர் என் பதும் இச்சவால்கள் ஏனைய தொழில்சார் சவால்களுக்கும் முக்கிய காரணிகளாக அமைகின்றன என்பதும் கண்டறியப்பட்டுள் ளது. (சிறீஸ்கந்தராசா துவாரகன், 2016)

மேற்குறித்த ஆய்வுகள் மீதான அவதானிப் பின்படி, இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எவற்றிலும் இலங்கையினுடைய வடமாகாண பிராந்திய பெண் ஊடகவிய லாளர்கள் சார்ந்து சந்தர்ப்பங்களும் சவால் களும் தனித்தும், குறிப்பாகவும் ஆய்விற் குட்படுத்தப்படவில்லை என்பதை அறிய முடிந்தது. பொதுவில், பெண் ஊடகவிய லாளர்கள் குறித்து சில விடயங்கள் ஆரா யப்பட்டிருந்தாலும் விரிவான கண்ணோட் டத்துடனும், தனித்தனியேயும் மதிப்பீடு

களோ, ஆய்வுகளோ முன்னெடுக்கப்பட வில்லை. ஆகையால், பின்வரும் விடயங்கள் ஆய்வின் இடைவெளிகளாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

பிராந்திய கவனம் இல்லாமை: இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள பெண் ஊடகவியலாளர்களின் தனித்துவமான சந் தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் குறித்து எந்த ஆய்வும் குறிப்பாகக் கவனம் செலுத்த வில்லை.

விரிவான கண்ணோட்டம் இல்லாமை: பெண் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச் சினைகள் ஒரு விரிவான மற்றும் முழுமை யான கண்ணோட்டத்தில் ஆராயப்பட வில்லை.

தனித்தனி மதிப்பீடுகள் இல்லாமை: ஒவ் வொரு சவாலையும் தனித்தனியாகவும் ஆழமாகவும் மதிப்பீடு செய்யும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள பெண் ஊடகவியலாளர்களின் தொழிற்றுறை சார்ந்த சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் குறித்து குறிப்பாகவும், விரிவாகவும், தனித் தனியாகவும் ஆராயும் ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதே இந்த ஆய்வின் முக்கிய ஆராய்ச்சி இடைவெளி யாகும். எனவே, 'வடபிராந்திய ஊடகத்துறை யில் பெண் ஊடகவியலாளர்கள்: தொழிற் றுறை சார்ந்த சவால்கள்' எனும் தலைப் பில் இவ் ஆய்வானது ஆய்வாளரால் ஆய் வுக்களத்தின் இடைவெளிகளை நிரப்புவதாக முன்வைக்கப்படுகின்றமை முன்னைய ஆய் வுகள் வழியே நியாயப்படுத்தப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

வடமாகாண பிராந்திய பெண் ஊடகவியலா ளர்கள் தொழில்வாண்மையை மேம்படுத்து வதற்கான சந்தர்ப்பங்கள் பலவற்றைக் கொண்டிருப்பினும், தொழில் சார்ந்து பல் வேறு சவால்களையும் எதிர்நோக்குகின்றார் கள் என்பதுடன் அத்தகைய சந்தர்ப்பங்களை யும், சவால்களையும் கண்டறிவதே பெண் ஊடகவியலாளர்களின் தொழில்வாண் மையை மேம்படுத்தும் என்பது ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டது. அதே வேளை, குறித்த சந்தர்ப்பங்கள் சவால்கள் தொடர்பில் தனித்தனியே பின்வரும் பகுதி கள் ஆய்வாளரால் அடையாளப்படுத்தப்பட் டுள்ளன.

- தனிப்பட்ட ரீதியிலான அம்சங்கள்

ஊடகக்களத்தில் பணியாற்றத் தூண்டிய காரணிகள், குடும்பத்தின் ஆதரவு மற்றும் திருமணத்திற்குப் பின்னரான நிலைமை, பணியாற்றும் காலப்பகுதி, உளவியற் பிரச்சினைகள்

- **பணியிடத்திலான அம்சங்கள்**

ஊடகக்களத்தில் பால்நிலைப் பாரபட்சம், வேதனம், தொழில்சார் பாதுகாப்பு, பணி நேரம்பணிக்கான அங்கீகாரம், பணிக்கப் படும் வேலையுடனான பணித்திருப்தி, அச் சுறுத்தல்கள், பிரச்சினைகளை வெளிப் படுத்தவல்ல களங்கள், பதவிநிலை மற்றும் பதவியுயர்வு, முறையான பயிற்சிகள் மற்றும் தொழில் விருத்தி, ஊடக நிறுவனங்களின் அதிகரிப்பு, ஊடகத்துறை ஆர்வமும் அதற் கேற்ற அங்கீகாரமும், ஊடக உயர்கல்வி, பட்டப்பின் படிப்பு, பட்டயக்கல்வி ஆகிய வற்றிற்கான வெளி

- **சமூக அளவிலான அம்சங்கள்**

ஊடகவியலாளராகப் பெண்களை நோக்கும் சமூகம், செய்தி சேகரிக்கும்போதும் அறிக்கையிடும்போதுமான சமூகரீதியான சவால்கள்

ஆய்வின் நோக்கங்களாக, வட பிராந்தி யத்தில் இயங்கும் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் பணியாற்றக்கூடிய பெண் ஊடகவியலாளர் களது வாய்ப்புக்களை இனங்காணுதல் மற் றும் சவால்களை அடையாளம் காணுதல் ஆகியன கருத்திற்கொள்ளப்பட்டன. ஆய் வின் முதன்மை நோக்கம் ஒரு குறிப்பிட்ட குழு வினரின் அனுபவங்களையும் கருத்துகளை யும் ஆராய்வதாக இருப்பதால், விவரிப்பு ஆய்வு வடிவமைப்பு (Descriptive Research Design) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, வடக்கு மாகாணத்தில் பணிபுரியும் பெண்

ஊடகவியலாளர்களின் தொழில் சார்ந்த யதார்த்தத்தை விவரிக்கவும், அவர்களின் சவால்களையும் வாய்ப்புகளையும் அடையா ளங்காணவும் உதவியது.

ஆய்வில் அளவறிதலானது மூன்று நிலைமை களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட பிராந் தியத்தில் இருக்கும் பத்திரிகைகள், வானொ லிகள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் பணியாற்றிய - பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய பெண் ஊடகவியலாளர்களது தனிப் பட்ட ஆழமான நேர்காணல் வினாக்கொத்து மற்றும் நேர்காணல் ஆகியவற்றினூடாகத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

அந்தவகையில், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழகேசரி' தொடக்கம் 'ஈழநாடு', 'ஈழநாதம்', 'முரசொலி', 'தினமுரசு', 'தினக் குரல்', 'தினவொளி', 'உதயன்', 'வலம்புரி', 'தீபம்', 'புதுவிதி', 'எதிரொலி', 'காலைக்கதிர்', 'யாழ் வீரகேசரி' ஆகியவற்றுடன் வடபிராந் தியத்தில் நிலைபெற்றிருந்த மற்றும் நிலை பெற்றிருக்கும் 'தமிமீழ வானொலி', 'புலி களின் குரல்', 'யாழ் - FM ஆகிய வானொலி அலைவரிசைகள் மற்றும் 'நிதர்சனம்', 'Dan குழுமம்', 'பகலவன்', 'DD TV', Capital TV, IBC தமிழ்' முதலிய தொலைக்காட்சி அலை வரிசைகள் ஆகிய ஊடகங்களில் பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய பெண் ஊடக ஆளுமைகளிடமிருந்து தகவல்கள் திரட்டிக் கொள்ளப்பட்டன. இங்கு எண்சார் மற்றும் பெறுதிசார் ஆய்வுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆய்வில் வினாக்கொத்து, குவிமையக் கலந்துரையாடல், தனிப்பட்ட ஆழமான நேர்காணல் ஆகியவற்றினூடாகப் பெறப் பட்டவை முதனிலைத் தரவுகளாகவும், ஆய் வாளரால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆய்வுடன் தொடர்புடைய சஞ்சிகைகள், புத்தகங்கள் இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

வட பிராந்தியத்தின் பத்திரிகைகள், வானொ லிகள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய பெண் ஊடகவியலாளர்கள் என்ற அடிப்படையில் நிகழ்தகவற்ற முறையில் எளிய எழுந்தமான 20 மாதிரிகள் தேர்வு செய்யப்பட்டு, செய்தியாளர்கள், துணைச் செய்தி ஆசிரியர்கள், மூத்த செய்தி ஆசிரியர்கள், நிகழ்ச்சி முகாமையாளர்கள், செய்தி ஆசிரியர்கள், நிகழ்ச்சி முன்வைப் பாளர்கள், செய்தி முன்வைப்பாளர்கள், அலுவலகச் செய்தியாளர்கள் ஆகியோரிட மிருந்து வினாக்கொத்து மற்றும் குவிமையக் கலந்துரையாடல் வழியாகத் தரவுகள் திரட் டப்பட்டுள்ளன.

வடபிராந்தியத்தில் பத்திரிகைகள், வானொலி கள், தொலைக்காட்சிகள் ஆகிய ஊடகங் களில் நிறைவேற்று அதிகார நிலையில் பணி யாற்றிய மற்றும் பணியாற்றிக் கொண்டி ருக்கக்கூடியவர்களுடனான நேர்காணல்கள் வழியாகவும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.


இந்த ஆய்வில் தகவல் ஒப்புதல் (Informed Consent) ஆய்வில் பங்கேற்கும் அனைத்து நபர்களுக்கும் ஆய்வின் நோக்கம், நடை முறை, பங்கேற்பின் தன்னார்வம் மற்றும் அவர் கள் வழங்கிய தகவல்கள் எவ்வாறு பயன் படுத்தப்படும் என்பது குறித்து முழுமையாக விளக்கப்பட்டு, அவர்களின் ஒப்புதல் பெறப் பட்ட பின்னரே தரவு சேகரிப்பு மேற்கொள் ளப்பட்டது. பெண் ஊடகவியலாளர் களில் முழுமையான அடையாளங்கள் வெளிப் படுத்த தயங்கியவர்களின் விபரங்கள் இங்கு வெளிப்படுத்தப்படவில்லை. தெரிவுசெய்யப் பட்ட மாதிரிகளின் பாதுகாப்பு கருதி அவர் களது பெயர்கள் மற்றும் அடையாளங்கள் ஆய்வாளரால் வெளிப்படுத்தப்படவில்லை.

**தரவுப்பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

**தனிப்பட்ட ரீதியிலான சந்தர்ப்பங்கள், சவால்கள்**

**ஊடகத்துறையில் பணியாற்றத் தூண்டிய முதன்மைக் காரணி**

ஊடகத்துறையில் பணியாற்றத் தூண்டிய முதன்மைக் காரணிகளாக சமூகத்திற்ச் சேவையாற்றுதல், தொழில் விருப்பு, வேறு வாய்ப்புக்கள் இன்மை, சமூக அந்தஸ்து, பிரபல்யம், பிறரது தூண்டுதல் ஆகியன தெரிவுக்கு முன்வைக்கப்பட்டன.




ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, ஊடகத்துறையில் பணியாற்றத் தூண்டிய முதன்மைக் காரணிகளில் சமூகத்திற்குச் சேவையாற்றுவதற்கென 50 சதவீதமான பெண் ஊடகவியலாளர்களும், தொழில் விருப்பிற்காக 25 சதவீதத்தினரும், சமூக அந்தஸ்தினைப் பெறுவதற்காக 15 சதவீதத்தினரும், பிரபல்யம் பெறுவதற்கென 10 சதவீதத்தினரும் குறிப்பிட்டிருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்குறித்த தரவுகளின் அடிப்படையில், ஊடகத்துறையில் பணியாற்றத் தூண்டிய காரணிகளில் அதிகமான பெண் ஊடகவியலாளர்கள் 'சமூகத்திற்குச் சேவையாற்றுவதற்கு' என்ற விடயத்தினையே குறிப்பிட்டுள்ளனர். இக்காரணியே பெண்களை ஊடகத்துறைக்குள் நுழைவதற்குரிய அதிகமானோர் பிரேரிக்கும் முதன்மைக்காரணியாக இருப்பது இவ் ஆய்வின்வழி கண்டறியப்பட்டுள்ளது. இதனையே நேர்காணல்களும் பிரதிபலித்திருந்தன.

வடபிராந்திய ஊடகத்துறையைப் பொறுத்தவரையில் பெண் ஊடகவியலாளர்கள் தொழில் நிமித்தம் இணைந்த காலப்பகுதியாக போர்க்காலம் இருந்திருக்கின்றது. இங்குள்ள ஊடகங்களும் வணிக நோக்கத்தைக் கடந்தும் மக்களுக்குச் செய்திகளை அளிப்பதில் ஆர்வம் காண்பித்தமையும், பெண் ஊடகவியலாளர்கள் தம்மைப் போர்க்காலச் சூழலில் மக்கள் நலன் பணியாற்றுபவர்களாக தகவமைத்துக் கொண்டதும், வணிக மைய நோக்கங்களிலிருந்து விலகி மக்கள் சேவையை அதிகம் வெளிப்படுத்தி சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்ற காரணியினைத் தூண்டியிருக்க முடியும். தொழில் விருப்பு எனும் அடுத்த நிலையிலுள்ள காரணியானது, பெண் ஊடகவியலாளர்கள் ஊடகத் தொழிலில் காட்டும் ஆர்வம், வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துடனான ஊடக அறிவு ஆகியவற்றினூடாக வெளிப்பட்டிருக்க முடியும்.


சமூக அந்தஸ்து மற்றும் பிரபல்யத்தன்மை ஆகியன ஊடகப்பணி நிமித்தம் தமது படைப்புக்களில் பெயர் மற்றும் புகைப்படங்கள் இணைந்து பிரசுரமாகும்போதோ அல்லது வெளியிடப்படும்போதோ இருக்கின்ற பிரபல்யத்தன்மை மற்றும் சமூகத்திலே ஊடகங்களுக்கு இருக்கின்ற மதிப்பு, தேவை ஆகியன கருதியும் வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம்.
இதனைவிட, ஏனையவர்களைக் காட்டிலும் சமூகத்தில் ஊடகவியலாளர்களாக இருக்கும் பட்சத்தில் முன்னுரிமை வழங்கப்படும் சந்தர்ப்பங்களாலும் பெண் ஊடகவியலாளர்கள் இம்முடிவினை எட்டியிருக்க முடியும். குறிப்பாக, இலத்திரனியல் ஊடகமான தொலைக்காட்சியில் தமது சுய அடையாளத்தினை வெளிப்படுத்திச் செய்திகளை முன்வைத்தல், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், படைப்புக்களை ஆற்றும் சந்தர்ப்பங்களில் வெளிப்படும் ஊடகப்பிரபல்யம் பெண் ஊடகவியலாளர்கள் ஊடகத்தொழிலை ஆற்றுவ

தற்குத் தூண்டியிருக்க முடியும் எனவும் பொருட்கோடல் செய்யமுடியும்.

குறிப்பாக, பெண் ஊடகவியலாளர்களில் வெவ்வேறு வயதினரிடையே ஊடகத்துறையில் நுழைவதற்கான காரணங்களில் தலைமுறை ரீதியான வேறுபாடுகள் இருக்கலாம். அதாவது வயது குறைந்த இளவயதுப் பெண் ஊடகவியலாளர்களுக்கு இருக்கக்கூடிய 'பிரபலமாதல்' மற்றும் அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஊடகத் தொழில்நுட்ப அறிவு என்பன ஊடகத்தொழிலுக்குள் நுழைவதைச் சாத்தியமாக்கியிருக்க முடியும். உயர் கல்வி பெற்றவர்கள் சமூக அந்தஸ்து அல்லது தொழில் ரீதியான அங்கீகாரம் போன்ற காரணிகளை அதிகம் கருத்தில் கொண்டிருக்கலாம். போர்க்காலத்தில் ஊடகத்துறையில் இணைந்தவர்கள் மக்கள் சேவை மற்றும் சமூகப் பொறுப்பு போன்ற காரணிகளால் வலுவாகத் தூண்டப்பட்டிருக்கலாம். போருக்குப் பின்னர் இணைந்தவர்கள் தொழில் விருப்பம், ஊடகத்துறையின் வளர்ச்சி மற்றும் புதிய வாய்ப்புகள் போன்ற காரணிகளால் ஈர்க்கப்பட்டிருக்கலாம்.

**ஊடகக்களத்தில் பணியாற்றுகின்ற காலப் பகுதி**

வடமாகாணத்தில் ஊடகக்களத்தில் பணியாற்றுகின்ற பெண் ஊடகவியலாளர்களின் அனுபவத்தையும், அர்ப்பணிப்பான பணிகளையும் அவர்களது பணியாற்றும் காலப் பகுதி ஊடாக விளங்கிக்கொள்ள முயற்சிக்க முடியும். அதாவது ஆய்விற்குரிய மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாணத்தில் உள்ள பெண் ஊடகவியலாளர்களின் மொத்த எண்ணிக்கையை மூன்று




வருடங்களாகப் பணியாற்றுகின்றவர்கள், மூன்று தொடக்கம் ஏழு வருடங்களாகப் பணியாற்றுபவர்கள் மற்றும் ஏழு வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றுபவர்கள் என வகைப்படுத்தி வினாக்கொத்தினூடாகப் பெறப்பட்ட தகவல்களுக்கமைய ஊடகக்களத்தில் பணியாற்றுகின்ற காலப்பகுதி ஆய்வாளரால் அளவிடப்பட்டுள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் ஊடகத்துறையில் மூன்று வருடங்களுக்கும் குறைவாகப் பணியாற்றுவோர் 05 சதவீதத்தினராகவும், மூன்று தொடக்கம் ஏழு வருடங்களாக பணியாற்றுவோர் 20 சதவீதத்தினராகவும், ஏழு வருடங்களுக்கும் மேலாகப் பணிபுரிவோர் 75 சதவீதத்தினராகவும் அடையாளங் காணப்பட்டனர். இதனடிப் படையில், ஏழு வருடங்களுக்கும் மேலாக ஊடகத்துறையில் பணிபுரியும் பெண் ஊடகவியலாளர்களது காலப்பெறுமானம் 75 உயர்வுப் பெறுமானமாக இங்கு கணிக்கப்படுகின்றது.


ஒருமுறை ஊடகத்தினுள் நுழைந்தால் மீண்டும் அதிலிருந்து வெளியேற விருப்பமின்மை காரணமாக அதிக காலம் பணியாற்றுபவர்கள் வெளிப்பட்டிருக்க முடியும். ஊடகத்துறையில் எவ்வாறானதொரு அச்சுறுத்தலோ, நெருக்கடிகளோ, தடைகளோ இருப்பினும், தமது பணிநிலைகளை உறுதிப்படுத்தியதன் பின்னர் பெண் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அதில் நீடித்து நிற்பதில் ஆர்வம் செலுத்துகின்றார்கள் என்பது நேர்காணல்களிலும் உறுதிப்படுத்தப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் பெண் ஊடகவியலாளர்களாக இருந்தவர்கள் நீடித்திருக்க, பிற்பட்ட காலத்தில் ஊடகத் தொழிலில் நுழைந்தவர்கள் குறைவான, அதாவது 3-7 வரையான வருடங்களில் மாத்திரமே நிலைபெற்றிருக்கின்றார்கள் என்பதும், இது ஒரு தொய்வுநிலையாக வெளிப்படுவதும் கூர்ந்துகவனிக்கத்தக்கது. தொழிற் சந்தையில் பல்வேறுபட்ட தொழில்நிலைகள் உருவாகியிருப்பதும், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களினூடாகப் பெண் ஊடகவியலாளர்கள் நெருக்கடிகள், தடைகள், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருப்ப

தாலும் ஊடகத்தொழிலில் நின்று நீடித்துக் கொள்ள முடியாமை ஒரு காரணியாக இங்கு முன்வைக்கப்பட முடியும்.

**உளவியல் விடயங்கள்**

ஊடகப்பணி நிமித்தம் பெண் ஊடகவிய லாளர்களது உளவியல் காரணிகளாக மகிழ்ச்சி, சோர்வு, பயம், பதற்றம், கோபம், விரக்தி,மன அழுத்தம்,வேறு ஆகிய இருதுருவ நிலைகளும் அடையாளப்படுத்தப்பட்டன. ஊடகப் பணியில் ஈடுபடும்போது பெண் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல்கள் தொடர்பில் வினாக்கோவைக்குப் பதிலளித்த 20 மாதிரிகளின் பதில்கள் பின் வரும் விதத்தில் ஆய்வாளருக்கு கிடைக் கப்பெற்றன. இங்கு, ஒன்றுக்கும் மேற்பட்ட தெரிவுகள் குறிக்கப்பட ஊடகவியலாளர் களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.




ஆய்விற்குட்படுத்தப்பட்ட மாதிரிகளிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில், பெண் ஊடகவியலாளர்கள் அனைவரும் தமது பணி நிமித்தமாக உளவியல் ரீதியிலான சிக்கல்களை எதிர்கொண்டிருந்தமை இனங் காணப்பட்டுள்ளது. வரிப்படத்தின் பிரகாரம், 16 சதவீதமான பெண் ஊடகவியலாளர்கள் சோர்விற்கு ஆளானமையும், 11 சதவீதமான வர்கள் பயத்தினை எதிர்கொண்டதாகவும், 05 சதவீதமான பெண் ஊடகவியலாளர்கள் பதற்றத்திற்கு உட்பட்டதாகவும், 18 சத வீதத்தினர் மகிழ்ச்சிக்கு உட்பட்டதாகவும், கோபத்தினை எதிர்நோக்கியதாக 15 சதவீதத் தினரும், விரக்தியை எதிர்கொண்டதாக 10 சதவீதத்தினரும், ஊடகப்பணி நிமித்தமாக மன அழுத்தத்தினை 13 சதவீத பெண் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கியதாகவும் ஆய்வின்வழி கண்டறியப்பட்டுள்ளது.

பெண் ஊடகவியலாளர்கள் தமது தொழில் சார்ந்து எத்தகைய உளவியல் நிலைமை களைக் எதிர்கொண்டிருக்கின்றார்கள் என்ப தற்கு, ஊடகப்பணியில் சாதாரணமாக இருக்கும் வேலை மணி நேரத்தையும் கடந்து பணிபுரிய வேண்டிய நிலையிருப்பதாகவும், அதனால் ஏற்படும் சோர்வு நிலையினை உளவியல் விடயங்களில் ஒன்றாக அவர் கள் கூறுகின்றார்கள். குறிப்பாக, அதி கரித்த வேலைப்பளு சோர்வினை உருவாக்கு கின்றது என நான்கு ஊடகவியலாளர்கள் நேர்காணலின்போது ஒத்த கருத்துடைய பதிலை முன்வைத்திருந்தனர்.

இக்கருத்திலிருந்து சற்று வித்தியாசமான முறையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தினுடைய யாழ். சேவையில் பணி புரிந்துகொண்டிருக்கின்ற ஊடகவியலாளர்

தன்னுடைய கருத்தை முன்வைத்திருந்தார். எட்டு மணித்தியாலங்கள் தமக்கென ஒதுக் கப்பட்ட பணியுடன் இணைத்து இதர வேலை களும் பணிக்கப்படும் பட்சத்தில் சோர்வு ஏற்படுவதாக அவர் கூறுகின்றார். உதா ரணமாக, அறிவிப்புப் பணியுடன் இணைந்து விளம்பரதாரர்களைத் தேடுவது, அவர்களை அணுகுவது என்பவற்றை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

பெண் ஊடகவியலாளர்கள் தமது ஊடகப் பணியின் நிமித்தம் ஏற்படும் உளவியல் விடயங்களில் ஒன்றாகப் 'தொழில்சார் தயக்கம் அல்லது பயம்' என்பதைக் குறிப் பிட்டிருந்தார்கள். நிகழ்ச்சிகளின் உள்ளடக் கங்களைப் பொறுத்தும், அவற்றுக்குப் பொறுப்பேற்பது தொடர்பிலும் தொழில்சார் தயக்கம் அல்லது பயம் ஏற்படுவதாக அவர் கள் குறிப்பிடுகின்றார்கள். குறிப்பாக, அர சியல்சார் நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாகவோ அல்லது அதனை முன்னெடுத்துச் செல் லும்போதோ ஒருவித தொழில்சார் தயக்கம் அல்லது பயம் ஏற்படுவதாகக் கருத்துத் தெரிவிக்கின்றார் ஊடகவியலாளர் சபேசன் சோபனா. நிகழ்ச்சிகளினால் கொலை மிரட்டல்கள் மற்றும் அநாமதேய மிரட்டல்கள் தொடரும் பட்சத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் தொழில்சார் தயக்கம் அல் லது அச்சம் ஏற்படுவதாக இருவர் பதில ளித்திருந்தார்கள்.

போர்க்காலத்தில் பணியாற்றிய ஊடகவிய லாளர் ஒருவர், யுத்தம் இடம்பெற்ற காலத் தில் ஊடகத்துறையில் பணிபுரிவது என்பது சுலபமான ஒன்றல்ல, எப்போதும் ஒரு பதற்றம் இருக்கவே செய்யும் என்கின்றார். மேலும், போருக்குப் பின்னரான தற் போதைய காலத்தில் இனந்தெரியாதோர் தம்மை அவதானித்துப் பின்தொடரும் சந் தர்ப்பங்களில் அச்சம் எழுவதாகவும் பதி லளித்திருந்தார்.

ஊடகப்பணியின் நிமித்தம் சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமல் இருக்கும் சந் தர்ப்பங்களில் ஏதேனும் கவனயீனத் தவறு கள் நேர்ந்துவிடும் என்ற பயம் இருப்பதாக பெண் ஊடகவியலாளர் ஒருவர் பதிலளித் திருந்தார். இவ்வினாவிற்குச் சற்று வித்தி யாசமாக பதிலளித்த யாழ்ப்பாணத்தின் தொலைக்காட்சியில் பணிபுரியும் பெண் ஊடகவியலாளர் ஒருவர், ஊடகப்பணி நிமித்தம் வெளிக்களப்பணியில் இன்னொரு ஆணுடன் பணியாற்றும்போது சமூகத்தில் தெரிந்தவர்கள் பார்த்துத் தவறான கதை களைச் சித்திரித்துவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுவதாகப் பதிலளித்திருந்தார்.

**பெண்களின் நடத்தை மீதான சமூகக் கட்டுப்பாடு:**

வடக்கு மாகாண சமூகத்தில், குறிப்பாக, ஊடகத்துறை போன்ற பொதுவெளியில் பணிபுரியும் பெண்களின் நடத்தை மற்றும் உறவுகள் கூர்ந்து கவனிக்கப்படுகின்றன. ஒரு பெண், ஆண் சக ஊழியருடன் இணைந்து பணிபுரிவது கூட தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, அவதூறுகளுக்கு வழிவகுக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது. இது பெண்களின் தொழில்ரீதியான சுதந்திரத்தையும், அவர்கள் சுதந்திரமாகப் பணிபுரிவதற்கான சூழலையும் கட்டுப்படுத்துகிறது.

**பாலினப் பாகுபாடு மற்றும் இரட்டைத் தராதரங்கள்:**

இந்த விடயம், சமூகத்தில் நிலவும் பாலினப் பாகுபாட்டின் வெளிப்பாடாகும். ஒரு ஆண் ஊடகவியலாளர் பெண் சக ஊழியருடன் இணைந்து பணிபுரியும்போது இதுபோன்ற அச்சங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு. ஆனால், ஒரு பெண் ஆண் சக ஊழியருடன் பணிபுரியும்போது அவளது ஒழுக்கம் மற்றும் நற்பெயர் குறித்து உடனடியாக கேள்விகள் எழுப்பப் படுகின்றன. இது ஊடகத்துறையில் மட்டு மல்லாமல், பொதுவாக சமூகத்திலும் பெண் களுக்கு எதிரான இரட்டைத் தராதரங்களை எடுத்துக்காட்டுகிறது.

செய்திகள் வடிவமைக்கப்பட்டு, அவை வெளி யீடாக வரும்வரையிலும் அச்சம் ஏற்படும். ஏனெனில் ஊடக அறம் பேணப்பட்டுள்ளதா அல்லது ஏதேனும் தவறுகள் இருக்குமா என்ற சந்தேகமே அச்சத்தை ஏற்படுத்திவிடுவதாக

பெண் ஊடகவியலாளர் ஒருவர் பதிலளித்திருந்தார்.

### குடும்பம்சார் ஆதரவும், எதிர்பார்ப்பும்

பெண்கள் ஊடகத்துறைக்குள் பணிபுரிவது தொடர்பில் குடும்பத்தாரின் ஆதரவு குறித்து மாதிரிகளிடம் இருந்து பெறப்பட்ட பதில்களை அடிப்படையாகக் கொண்டு ஊடகத்துறையில் பணியாற்றுவதற்குக் குடும்பத்தின் ஆதரவு 30 சதவீதமானவர்களுக்கும், குடும்பத்தின் ஆதரவு இன்மையானது 40 சதவீதத்தினருக்கும், குடும்பத்தின் ஆதரவு ஓரளவு கிடைப்பது 30 சதவீதமானவருக்கும் ஆக இருப்பது ஆய்வின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

ஊடகத்துறையில் பெண்கள் பணிபுரிவது தொடர்பில் குடும்பத்தாரது ஆதரவு இல்லையெனில், எவ்வாறான வேறு பணிகளைத் தேர்ந்தெடுக்கும்படி கருத்துக்களை முன்வைக்கின்றார்கள் என்ற வினாவிற்குப் பின்வருமாறு தமது கருத்துக்களை பதிவு செய்திருந்தனர் பெண் ஊடகவியலாளர்கள். திருமணத்திற்குப் பின்னரான பொறுப்பு நிலைமைகளைக் காரணங்காண்பிப்பதுடன், ஊடக சுதந்திரம் மற்றும் அதனைத் தொடர்ந்துள்ள அச்சுறுத்தல்களை முன்வைத்து வேறு பணியைத் தேர்ந்தெடுக்கும்படி ஆலோசனை வழங்கப்படுவதாக பதிலளித்த பெண் ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். பெண்கள் ஊடகத்துறையில் பணிபுரிந்தால் சமூகக் கண்ணோட்டம் தவறாக மாறக்கூடும் என குடும்பத்தார் கருதுவதாக ஊடகவியலாளர் ஒருவர் பதிலளித்திருந்தார். ஊடகத்துறையுடன் ஒப்பிடுகையில் வேறு வேலைகளைச் செய்வதால் அதிக வருமானத்தை ஈட்ட முடியும் எனக் குடும்பத்தவர்களிடமிருந்து ஆலோசனை வழங்கப்படுவதாக தனது கருத்தை மற்றுமொரு ஊடகவியலாளர் முன்வைத்திருந்தார்.

இவ்வினா குறித்து நேர்காணலுக்குப் பதிலளித்திருந்த பெண் ஊடகவியலாளர் ஒருவர் “நான் ஊடகத்துறையில் பட்டம் பெற்றிருப்பதால் அரச வேலைக்குள் நுழையும்படி எனது குடும்பத்தார் அடிக்கடி கூறுவதுண்டு” என தனது கருத்தை முன்வைத்திருந்தார். இவ்வினாவிற்குப் பதிலளித்த ஊடகவியலாளர் ஒருவர் “ஆரம்பத்தில் குடும்பத்தாரின் ஆதரவு கிடைக்கவில்லை. இராணுவக் கெடுபிடிகள் இருந்ததால ஆதரவு கிடைக்கேல. பிறகுதான் ஓரளவு ஆதரவு கிடைத்தது. என்னைப் பற்றித் தவறான செய்திகளுடன் கூடிய புகைப்படங்கள் முகப்புத்தகத்தில வெளியான நேரம் எனது உறவினர்கள் பலர் தொலைபேசி எடுத்து வீட்டு ஆக்களோட அதப்பற்றி கேக்கத் தொடங்கிட்டினம். ஒரு நிகழ்வுக்குக் கூட என்னோட சேர்ந்து வர மாட்டாங்கள். நான் ஊடகத்தில் வேலை செய்யிறதெண்டு. ஏனென்டா, யுத்த காலத்தில நிறைய எதிர்ப்புக்கள் எனக்கெதிரா இருக்கிறதால எங்கட குடும்பத்தினர் பயப்பிடுவாங்கள்” எனத் தனது பதிலை முன்வைத்திருந்தார்.

இளவயதில் ஊடகத்துறையை மேற்கொள்ள முடியும், ஆனால் ஒரு பெண்ணாக இருந்து வயது மூப்பின் போது ஊடகத்துறையில் பணிபுரிய முடியுமா? என வயதினைக் காரணங்காண்பிப்பதாக இருவரும், உள்ளூர் ஊடகங்களிலிருந்து விலகி வெளிநாட்டு ஊடகங்களைத் தேர்ந்தெடுக்குமாறு குடும்பத்தினர் ஆலோசனை வழங்குவதாகவும், ஊடகங்களில் பெண்கள் பணிபுரிவதால் திருமணநிலை பின்தள்ளிப்போகலாம் எனவும், கணவனையோ அல்லது கணவரின் வீட்டாரையோ எதிர்த்தோ அல்லது மதிக்காது நடக்கலாம் என நினைத்துத் திருமணம் நிகழாது எனவும் குடும்பத்தினர் ஆலோசனைகளை வழங்கியதாக நேர்காணல் செய்யப்பட்ட பெண் ஊடகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும், இவ்வினாவிற்கு பெண் ஊடகவியலாளர் ஒருவர் “ஊடகத்தில் பணிபுரிந்தால் எவ்வாறு திருமணமாகும். ஊடகத்தில் பணிபுரியும் பெண்களுக்கு இலகுவில் திருமணம் நடக்காது என என்னுடைய பெற்றோர்கள் கூறுவார்கள்” என்கின்றார்.

குடும்பம்சார் ஆதரவு கிடைக்கின்றது எனப் பதிலளித்த பெண் ஊடகவியலாளர், தன்னுடைய பெற்றோர் ஆரம்பத்தில் ஊடகப்பணி குறித்து அச்சமடைந்திருந்தாலும், திருமணத்திற்குப் பின்னர் கணவரிடமிருந்து முழுமை

யான ஆதரவு கிடைப்பதால் என்னால் தொடர்ந்தும் ஊடகத் தொழிலில் நீடித்து நிற்க முடிகின்றது என்கின்றார். இதனை ஆதரித்துக் கூறும்போது, என்னுடைய பெற்றோர் எனது துணிச்சலையும், ஊடகத்தொழிலையும் விரும்பினார்கள். அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள். எனக்கு குடும்பத்தாரால் ஆதரவு மாத்திரமே கிடைக்கப்பெற்றது என ஊடகவியலாளர் ஒருவர் பதிலளித்திருந்தார்.

**பணியிடம்சார் சந்தர்ப்பங்கள், சவால்கள்**


### தொழில்சார் பாதுகாப்பு

ஊடக நிறுவனங்களில் எத்தகைய தொழில்சார் பாதுகாப்பு விடயங்கள் பின்பற்றப்படுகின்றன என்பதை வெளிக்கொணர ஆய்வாளரால் அவை சிறு உட்பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன. தொழில்சார் பாதுகாப்பு விடயங்களாக, உரியவேளை சம்பளம், பணிக்கேற்ற சம்பளம், விரும்பியபோதான விடுமுறை, மருத்துவக் காப்பீடு, ஊழியர் சேமலாபநிதி[1], ஊழியர் நம்பிக்கை நிதியம்[2], முறையான உணவு இடைவேளை, போக்குவரத்து வசதிகள் ஆகியன கருதப்படுகின்றன.

[1]இலங்கையின் தொழிலாளர் சேமலாப நிதியம் என்பது இலங்கை அரசால் 1958 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு கட்டாய நிதித் திட்டமாகும். இது நாட்டின் மிகப்பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் ஒன்றாகும். இதில் ஊழியர் எட்டு வீதமாகவும், நிறுவனம் பன்னிரண்டு வீதமாகவும் நிதிப்பங்களிப்புச் செய்யப்படும்.

[2]இலங்கையின் தொழிலாளர் நம்பிக்கை நிதியம் என்பது இலங்கை அரசால் 1980 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு கட்டாய நிதி திட்டமாகும். மேலும், இது ஊழியர்களின் நலனை மேம்படுத்துவதற்காகவும், அவர்களின் வேலையிலிருந்து வெளியேறும்போது, நிதி ஆதாரத்தை வழங்குவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் பெரும்பாலும் தனியார் துறையில் மற்றும் சில அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கானது. நிறுவனங்கள் தங்களது ஊழியர்களின் நம்பிக்கை நிதியக் கணக்கில் ஊதியத்தின் மூன்று வீதத்தினை மாதந்தோறும் கட்டாயமாகச் செலுத்த வேண்டும். இது முழுமையாக நிறுவனங்களின் பங்களிப்பாகும்.

குறித்த வினாவிற்கு 20 பெண் ஊடகவியலாளர்களின் பதில்கள் பின்வருமாறு ஆய்வாளருக்கு பின்வருமாறு கிடைக்கப்பெற்றன. இங்கு, ஒன்றுக்கும் மேற்பட்ட தெரிவுகள் குறிக்கப்பட ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.




ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளினுடைய பதில்களின் அடிப்படையில், ஊடகத்துறையில் பெண் ஊடகவியலாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு விடயங்களில் ‘உரியவேளை சம்பளம்’ கிடைப்பதாக 70 சதவீதத்தினரும், ‘பணிக்கேற்ற சம்பளம்’ என்ற அடிப்படையில் 30 சதவீதத்தினரும், ‘விரும்பிய போதான விடுமுறைகள்’ என்பதை 30 சதவீத பெண் ஊடகவியலாளர்களும், ‘உரிய வேலை நேரம்’ என்பதை 15 சதவீதத்தினரும், ‘மருத்

துவக் காப்பீடு' தொடர்பில் 15 சதவீதத்தினரும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதாக 25 சதவீதத்தினரும், 'முறை யான உணவு இடைவேளை' என்ற தொழில் சார் பாதுகாப்பு விடயத்தை 45 சதவீதத் தினரும், 'போக்குவரத்து வசதிகள்' கிடைக் கின்றன என்பதை 35 சதவீதத்தினரும் குறிப் பிட்டுள்ளனர். மேற்குறித்த தரவுகளின் அடிப் படையில், பெண் ஊடகவியலாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு விடயங்களில் உரிய வேளை சம்பளம் கிடைப்பது முதன்மை யானதாக ஊடகவியலாளர்கள் கருதுவது ஆய்வாளரால் இனங்காணப்பட்டுள்ளது. இங்கு சில பெண் ஊடகவியலாளர்கள் சம் பளம் தொடர்பில் போதியளவு சம்பளம் கிடைக்கப்பெறாமை குறித்தும், சம்பளப் பட்டியலில் பால்நிலைப் பாரபட்சம் நிலவு கின்றது எனவும் தமது கருத்துக்களை நேர் காணல்களில் வெளிப்படுத்தியிருப்பினும் அதி களவிலான பெண் ஊடகவியலாளர்கள் தமது பணி நிமித்தம் உரிய நேரத்திற்கு சம்பளம் கிடைக்கப்பெறுவதாகக் கூறுகின்றார்கள்.

கட்டமைக்கப்பட்ட பெரிய முதலீட்டுடன் இயங்குகின்ற பெரிய ஊடக நிறுவனங்களில் ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், மருத்துவக் காப்பீடு ஆகிய அனைத்தும் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது. வெவ்வேறு வயதினரிடையே தொழில்சார் பாதுகாப்பு குறித்த எதிர்பார்ப்புகள் மற்றும் அனுபவங்கள் வேறுபடலாம். உயர்கல்வி பெற்றவர்கள் சிறந்த தொழில்சார் பாது காப்பை அல்லது தங்களது உரிமைகள் குறித்து அதிக விழிப்புடன் இருக்கின்றார்கள். இளவயதுடைய, திருமணமாகாத பெண் ஊடகவியலாளர்களிடையே வெறுமனே 'ஊடகப் பிரபல்யமாதல்' என்ற எண்ணக் கரு மாத்திரமே இருப்பதால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் குறித்தோ அல் லது தொழில்சார் பாதுகாப்புக் குறித்தோ பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்பது ஆய்வின்வழி கண்டறியப்பட்டுள்ளது.

#### ஊடகத்துறையில் வேதனம்

வேதனமானது பல்வேறுபட்ட காரணிகளால், நியமங்களால் தீர்மானிக்கப்படுகின்றது. தொழில் சார்ந்து ஒரு தொழிலாளிக்கு வேலையின்பால் ஆர்வத்துடன் ஈடுபட வைக்கும் காரணிகளில் முதன்மையானது வேதனமாகும். சவால்கள் கடந்தும் தொடர்ந் தும் ஒருவர் அப்பணியை மேற்கொள்ள உந்து தல் காரணியாக இருப்பதும் வேதனமாகும். ஆகையால், இத்தகையதொரு விடயதானம் ஆய்வு செய்யப்பட வேண்டியதாகும்.

ஊடகத் துறையில் வேதனம் என்கின்ற விட யம் குறித்து அதிகளவான பெண் ஊடகவிய லாளர்கள் 'திருப்தியின்மை' என்பதையே முன்வைத்திருந்தனர். அதற்கான காரணங் களாக குடும்பத்தை முன்னெடுத்துச் செல் வதற்கு கிடைக்கும் வேதனம் போதாது, செய்திகள் சேகரிப்பதற்கு தமது சொந்த வாகனங்களில் செல்வதால் வாகன எரி பொருளுக்குரிய செலவு, ஊடகக் கருவிகள் பழுதடைந்தால் அதற்குரிய செலவீனங்கள் என்பன பொருளாதார நெருக்கடியினால் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன என தனது கருத்தை பெண் ஒருவர் முன்வைக் கின்றார்.

மேலும், "நீண்ட நேர வேலை என்பதுடன், வீட்டிற்கு வந்த பின்னரும் ஊடகப்பணியையே மேற்கொள்ள வேண்டும். வேதனம் போதாத சந்தர்ப்பத்திலும், வேறு தொழில் இல்லை யென்று நாங்கள் தொடர்ந்தும் இப்பணியில் இருக்கவில்லை. தொழில் விருப்பினாலேயே தொடர்ந்தும் ஊடகப்பணியை மேற்கொள் கின்றேன்" என்கின்றார் பெண் ஊடகவியலா ளர் ஒருவர். அனைத்து ஊடகங்களிலுமே வேதனப் பற்றாக்குறை என்பது பெரும் பிரச்சினையாக உள்ளது. மகப்பேற்று விடு முறைகளில் வேதனமே அற்ற ஒரு விடு முறையாகவே கிடைக்கின்றது என்கின்றனர் பதிலளித்த இருவர். "மகப்பேற்று நேரங்களில் ஏற்படும் செலவீனங்கள் பெருமளவில் ஊடகப்பணி மற்றும் ஊடக நிறுவனங்களின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன" என்கின்றார் திருமணமான பெண் ஊடகவியலாளர் ஒருவர். நாம் அதிகளவில் வேலை வாங்கப்படுகின்றோமே தவிர அதற்குரிய ஊதியத்தினை வழங்க

யாரும் முன்வருவதில்லை. சில வெளி ஊட கங்களில் எமது பங்களிப்புக்களை நாம் வழங்கியிருந்தாலும், அதற்குரிய சம்பளமும் பெரும்பாலான வேளைகளில் கைகளுக்கு வந்து சேருவதில்லை எனத் தமது கருத் துக்களை இருவர் முன்வைக்கின்றார்கள்.

"ஊதியத்தில மிகப்பெரிய வேறுபாடு இருக்கு. ஆனால் சரியான நேரத்தில சம்பளம் தந் திடுவாங்கள். கல்வித்தகைமையைக் கணக்கி லெடுக்க மாட்டாங்கள். ஆண்களுக்கே அதிலயும் அதிக ஊதியம் போகும். அது என்னவோ எழுதப்படாத விதி எண்டே சொல்லலாம்" எனக் குறித்த வினாவிற்குப் பதிலளித்திருந்தார் அச்சு ஊடகத்தில் பணி புரியும் பெண் ஊடகவியலாளர்.

ஊடகத்துறையில் பெண் ஊடகவியலாளர் களுக்கு வழங்கப்படும் வேதனம் திருப்தி யின்மைக்கான காரணியாக அமைவதற்கு அதிக வேலைச்சுமையுடனான குறைந்தளவு சம்பளம் தீர்மானிக்கப்படுவதும், பெண் ஊடகவியலாளர்களைவிட ஆண்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படுவதும் முக்கிய மானதாகின்றது. திருப்தி மற்றும் ஓரளவு திருப்தி எனப் பதிலளித்தவர்களில் பலர் திருமணம் செய்துகொள்ளாத பெண் ஊடக வியலாளர்களாவார் என்பதும் இங்கு கவ னிக்கத்தக்கது. குடும்பம், பிள்ளைகள் என வாழ்பவர்களுக்கு ஊடகங்களால் வழங்கப் படும் வேதனம் போதாமலிருப்பது இதனால் உறுதியாகின்றது.

**கிடைக்கப்பெறும் வேதனம் போதாதவிடத்து ஊடகத்தொழிலுடன் இணைந்து வேறு வேலைகளில் ஈடுபடும் தன்மை**

குடும்பத்துடன் இருக்கின்ற பெண் ஊடக வியலாளர்கள் தமது தொழில் நிமித்தம் வருமானம் ஈட்டிக்கொள்ள முடியாத நிலை களில் பகுதி நேரமாக ஆடைக்கடைகள், சுய தொழில், தட்டச்சு எனப் பல்வேறு தொழில் களில் ஈடுபடுகின்றார்கள். இந்நிலை சுயாதீன ஊடகவியலாளர்களாக இருப்பவர்களுக்குச் சாதகமாக இருக்கின்றது. முழுநேர ஊடக வியலாளர்களுக்கு பணிநேரம் தவிர்த்து நேர மின்மை காரணமாக இவை சாத்தியமாக வில்லை. இருப்பினும், பெரும்பாலான பெண் ஊடகவியலாளர்கள் ஊடகத்தொழிலுடன் வேறு வேலைகளில் ஈடுபடுவது குறித்து ஆர்வமும், திட்டமும் இருப்பதாகத் தமது முடிவுகளை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

குறிப்பாக, பெண் ஊடகவியலாளர் ஒருவர் "நான் சுயாதீன ஊடகவியலாளராகப் பணி யாற்றினாலும் எனது குடும்ப நிலை காரண மாக பலசரக்குக் கடை ஒன்றினை நடாத்தி வருகின்றேன். ஊடகத் தொழிலில் இருக்கிற விருப்பத்தால அத முழுமையா விட முடியல. கடையில ஒருவித நிம்மதி இருக்கு. ஆனா ஈடுபாடு இல்ல. ஊடகத்தில நிம்மதி இல்ல. ஆனா ஈடுபாடு இருக்கு" என்கின்றார்.


இரு பெண் ஊடகவியலாளர்கள் ஆடைக்கடை வைத்திருப்பதாகக் கூறியிருந்தார்கள். ஊட கத்தொழிலில் கிடைக்கப்பெறும் வேதனம் போதாமையினால் இத்தொழிலைத் தேர்ந் தெடுத்ததாகக் அவர்கள் கூறுகின்றனர்.

ஊடகத்தொழிலில் கிடைக்கும் வேதனம் பொதுவாகவே ஏனைய தொழில்நிலைகளி லும் பார்க்கக் குறைவாகவே இருக்கின்றது. அதிலும் குறிப்பாக, ஊடக நிறுவனங்களில் பெண் ஊடகவியலாளர்கள், ஆண் ஊடக வியலாளர்களைக் காட்டிலும் குறைவான வேதனத்தையே பெறுகின்றார்கள். அதன் அடிப்படையில், குடும்பப் பொறுப்பில் இருக் கின்ற பெண் ஊடகவியலாளர்கள் ஊடகத் தொழிலைக் கைவிட விருப்பம் இல்லாது அதனோடு இணைத்து இன்னபிற பணி களிலோ அல்லது சுயதொழில்களிலோ ஈடுபட வேண்டிய நிர்பந்தந்திற்கு ஆளாகின் றார்கள்.

**ஊடகப்பணியிலுள்ள அச்சுறுத்தல்கள்**

ஊடகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு பல வகைகளாலும் அச்சுறுத்தல்கள் ஏற்படு கின்றன. அவை காலத்திற்குக் காலம் பல் வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றன என் பதை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. ஊடகப் பணியிலுள்ள அச்சுறுத்தல்கள் பெண் ஊடக வியலாளர்களைத் தொடர்ந்த வண்ணம் இருந்தாலும், அவற்றிலிருந்து எவ்வாறு மீண்டு தமது ஊடகப்பணியை அவர்கள் மேற்

கொள்கின்றார்கள் அல்லது பணியிலிருந்து விலகுகின்றார்கள் என்பதை வெளிப்படுத்த அதனோடு இணைந்த காரண காரியங்களும் ஆராயப்பட வேண்டும்.




வடபிராந்திய பெண் ஊடகவியலாளர்கள் தமது பணியின் நிமித்தம் எதிர்நோக்கும் இணையவழி அச்சுறுத்தல்களை 45 சத வீதத்தினரும், தொலைபேசி மிரட்டல்கள் குறித்த அச்சுறுத்தல்களை 35 சதவீதத் தினரும், பின்தொடர்தல் மற்றும் கண் காணித்தல் ஆகிய அச்சுறுத்தல்களை 25 சத வீதத்தினரும், அநாமதேயக் கடிதங்கள் ரீதி யில் 15 சதவீதத்தினரும், குறுஞ்செய்திகள் 30 சதவீதத்தினரும், தேவையற்ற கருத்துக்களை 05 சதவீதத்தினரும் அனுபவித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக, பெண் ஊடகவியலாளர்கள் தம்மை அடையாளப்படுத்தி அதாவது முகங் காண்பித்து ஊடகப்பணிகளை முன்னெடுக் கும்போது அதிக சவால்களைக் கொண்டிருக் கின்றார்கள் என்பது ஆய்வின்வழி வெளித் தெரியவந்துள்ளது.

அநேகமான பெண் ஊடகவியலாளர்கள் தமது திறமையான ஊடகச் செயற்பாடுகளுக்காக மேல்மட்ட ஊழியர்கள் மற்றும் சக ஆண் ஊடகவியலாளர்களாலேயே பழிவாங்கப் படும் சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. யுத்த காலத்தில் வெவ்வேறு விதமான மிரட் டல்கள், அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து இந் தப்போக்கு வேறு தளங்களில் இன்றும் தொடர்வதாக பெண் ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர். இங்கு பெண் ஊடகவிய லாளர்கள் முன்வைத்த அச்சுறுத்தல்கள் காலத்திற்கேற்றாற்போல் தொழில்நுட்பத் தளங்களில்பரிணாமம்அடைந்திருப்பதையும் காணமுடிகின்றது. பின்தொடர்தல் மற்றும் கண்காணித்தல் போன்ற அச்சுறுத்தல்கள் பெண் ஊடகவியலாளர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் கேள்விக் குள்ளாக்குகின்றன. இது அவர்களுக்கு தொடர்ந்து ஒருவித பயத்தையும் பதட்டத் தையும் ஏற்படுத்தலாம், மேலும் அவர்களின் அன்றாட வாழ்க்கையையும் பணியையும் பாதிக்கின்றது. ஒட்டுமொத்தமாக இணைய வெளிஎன்பதுபெண்ஊடகவியலாளர்களுக்கு ஒரு ஆபத்தான களமாக மாறியுள்ளது என் பதை இது காட்டுகிறது. சமூக ஊடகங்கள் மற்றும் செய்தி இணையதளங்களின் ஊடாக வரும் தனிப்பட்ட தாக்குதல்கள், அவதூறு கள் அவர்களின் மன உறுதியையும் தொழில் ரீதியான நம்பிக்கையையும் குலைக்கலாம். முகத்தைக்காட்டி ஊடகப்பணியை முன் னெடுக்கும்போது இந்த அச்சுறுத்தல்கள் மேலும் தீவிரமடையலாம்.

“எனக்கு பொலிஸ், Army, Navy எல்லா ரோடையும் தவறான தொடர்பு இருக்கு எண்டு சொன்னாங்க. என்னைப் பற்றி நான்

வேலை செய்த அலுவலகத்துக்கே அவதூறுகள் கொண்ட மொட்டைக் கடிதத்தை அனுப்பியிருந்தாங்க. நான் உடைஞ்சு போனன் அந்த இடத்தில" என தன்னுடைய அனுபவத்தை பெண் ஊடகவியலாளர் ஒருவர் வெளிப்படுத்தியிருந்தார்.

ஊடக நிறுவனத்திற்கு வெளியே தமது நிகழ்ச்சிகளின் உள்ளடக்கம் சார்ந்தோ, அல்லது குறித்தவொரு விடயத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் போதோ குறித்த விடயம் சார்ந்த எதிர்த்தரப்பினராலும் இணையவழி அச்சுறுத்தல்கள் தொடரப்படுவதாகவும் மேற்குறிப்பிட்ட பெண் ஊடகவியலாளர்கள் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

ஊடகப்பணிநிமித்தம் இதுவரையிலும் எவ்வித அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவில்லை என 25 சதவீதத்தினர் கூறுவதும் இங்கு கவனத்திற்கொள்ளவேண்டியுள்ளது. இதற்குரிய காரணங்களாக, தமக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை ஊடகமே முழுப் பொறுப்பெடுக்கும் எனவும், செய்திப்பத்திரிகைகள் மற்றும் செய்தி இணையத்தளங்களைப் பொறுத்தளவில் தமக்குரிய அடையாளக் குறியீட்டு எண் அல்லது புனைபெயரை வைத்தே தமது செய்திகள் அதிகம் பிரசுரமாவதால் தமது தனிப்பட்ட விடயங்கள் எதுவும் பொதுவெளிக்கு வருவதில்லை எனவும் அவ்வாறான பெண் ஊடகவியலாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

#### ஊடகப்பணி சார்ந்து பால்நிலை வேறுபாடுகள் காண்பிக்கப்படும் தன்மை

ஊடகங்களில் ஒரே பதவியில் ஒரே பணியினை ஆண், பெண் என்ற இருபாலாரும் மேற்கொண்டிருந்தாலும் சம்பளத்தில் சற்றேனும் வித்தியாசம் காண்பிக்கப்படும் நிலை இருக்கின்றது என்கின்றார்கள் அதிக எண்ணிக்கையிலானோர்.

மேலும், ஊடகவியலாளர் ஒருவர், "பெரும்பாலான ஊடகங்கள் பெண்களினது உடல் உழைப்பை மாத்திரம் பெற்றுக்கொள்கின்றார்கள். அதற்கான உரிய வேதனத்தை வழங்குவதில்லை' என்கின்றார் "ஊடகப் பணியின் ஆர்வம் காரணமாக பல நாட்கள் கால நேரம் பார்க்காது பணிபுரிந்திருந்தாலும், அதற்குரிய ஊதியம் கிடைப்பதேயில்லை. சம்பள இடைவெளி இருந்துகொண்டேயிருக்கின்றது. நான் பணிபுரிந்த பல ஊடகங்கங்களில் இதனை அவதானித்திருக்கின்றேன்" என்கின்றார் மற்றுமொரு பெண் ஊடகவியலாளர்.

பணிக்கப்படும் வேலையில் பால்நிலைப் பாரபட்சம் காண்பிக்கப்படுகின்றது எனக் குறிப்பிட்டு, ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்தியிருந்த பதில்கள் பின்வருமாறு அமைகின்றன. ஊடகப்பணி சார்ந்து வெளிக்களச் செய்தித் திரட்டலுக்காகத் தொலைதூர இடங்களுக்கு பெண்களை அனுப்புவதை நான் அனுபவித்திருக்கின்றேன் எனப் பதிலளித்த பெண் ஊகவியலாளர் ஒருவர் தெரிவித்திருந்தார். "ஒவ்வொரு ஊடக நிறுவனங்களுக்குள்ளும் நிறையப் பெண்கள் இருந்தாலும், எத்தனை சதவீதமான பெண்களை ஊடக நிறுவனங்கள் களத்திற்கு (Field) அனுப்புகின்றன? அவை அப்படி அனுப்புவதேயில்லை. எனக்கு வெளியில் சென்று பணிபுரிவது மிகவும் விருப்பமானது. ஆனால், பெண்களை மேசையோடு வைத்திருப்பார்கள். எங்களுக்கான ஆளுமையை வெளிக்கொணருவதற்கு சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. அதிலும் குறிப்பாக அச்சு ஊடகங்களில் சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவு" என மற்றுமொரு ஊடகவியலாளர் பதிலளித்திருந்தார்.

"அரசியல்சார் செய்திகளைத் திரட்டுவது என்றால் ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. முன்னின்று விடயங்களை வகுக்கும் திறமை ஆண்களுக்கே உரியது எனத் தவறான கருத்தைப் பெரும்பாலான ஊடக நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன" எனத் தொலைக்காட்சியில் பணிபுரியும் பெண்ணொருவர் பதிலளித்திருந்தார். "ஆண்களின் தலைப்புக்குரிய விடயம் எனப் பாரம்பரியமாக நோக்கப்படுகின்ற விளையாட்டு, அரசியல் மற்றும், பாதுகாப்பு முதலிய பரப்புக்களைக் கையளிப்பதற்குப் பெண்களுக்குத் தொடர்ந்தும் வாய்ப்புக்கள்

மறுக்கப்பட்டு வருகின்றன. இதனால் இத் தலைப்புக்களில் பெண்களின் கண்ணோட் டம் அதிகம் இழக்கப்படுகிறது" என ஊடக வியலாளர் ஒருவர் தனது கருத்தை வெளிப் படுத்துகின்றார்.

இங்கு அதிகளவான பெண் ஊடகவியலா ளர்கள் வேதனத்தில் பால்நிலைப் பாரபட் சம் காண்பிக்கப்படுவதாகத் தமது கருத்துக் களை வெளிப்படுத்தியிருந்தார்கள். இதனை விட, பொதுவெளியில் தம்மை அடை யாளப்படுத்த விரும்பாத பெண் ஊடக வியலாளர்கள் தமக்குக் கிடைக்கும் சந்தர்ப் பங்களைத் தாமாகவே முன்வந்து ஆண் ஊடகவியலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக் கும்போது, அவ்விடயம் காலாகாலமாக ஆண் களுக்கே உரியதாவதும் இங்கு ஆய் வாளரால் கண்டறியப்படுகின்றது. மேலும், யுத்த காலங்களில் இத்தகைய வேறுபாடு கள் இப்போதிருப்பதுபோல் இருக்கவில்லை என்பதும் புலனாகின்றது. ஆரம்ப காலங் களில் தீர்மானமெடுக்கும் வேளைகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப் படாது பாரபட்சம் கற்பிக்கப்பட்டிருப்பது மாறிப் போர்க்காலத்தில் நெகிழ்வுத்தன்மை ஏற்பட்டிருந்ததும் அதற்குப் பெண் போராளிகள் ஊடகத்துறையில் அடைந்த வளர்ச்சியும் காரணமாக உள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

**ஊடகப்பணி சார்ந்து இதுவரையிலும் பெற்றுள்ள பதவி உயர்வுகள்**

வட பிராந்திய ஊடக நிறுவனங்களில் பெண் ஊடகவியலாளர்கள் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கு உரியவகையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றதா? அவ்வாறு பதவியுயர்வு வழங்கப்படினும், அப்பதவிக்குக் காணப்படும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் முடிவெடுக்கும் தன்மை, அதற்குரிய வேதன அளவு ஆகியன பொருத்தமாக நடைமுறை யில் உள்ளனவா என்ற விடயதானம் ஆய் வுக்கு உட்படுத்தப்பட்டது.

ஊடகத்துறையில் பணிசார் பதவியுயர்வுகள் திருப்தியில்லை எனின், பதவி உயர்வுக்கு தடைகளாக அமைந்த காரணங்களாக, திருமண நிலைக்குப் பின்னரான குடும்பப் பொறுப்பு என்ற விடயத்தை ஒத்ததாக பலர் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். இவ்வினாவிற்குப் பதிலளித்த திருமணமான பெண் ஊடகவியலாளர்கள் "குறுகிய கால மகப்பேற்று விடுமுறைக்குப் பின்னர் மீண் டும் பணியில் இணையும்போது, மீண்டும் ஆரம்ப நிலைக்கு அதாவது சம்பள அளவு மற்றும் பதவிநிலைக்குத் திரும்பும்போது பதவியுயர்வுகள் கிடைக்காமல் போன சந் தர்ப்பங்களும் இருந்திருக்கின்றன" எனக் குறிப்பிட்டிருந்தனர்.

தமது ஊடக நிறுவனக் கட்டமைப்பிலுள்ள காலதாமதம், முறையான பதவி உயர்வு களுக்கான எழுத்து மூலமான விதிமுறைகள் இல்லாமை, பெண்களாக இருக்கும் கார ணத்தினால் வேண்டுமென்றே பதவியு யர்வுகள் நிராகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன என்ற கருத்துக்களை பெண் ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்தியிருந்தார் கள். "ஊடகத்துறையில் பலவருட கால அனுபவம் எனக்கு இருந்தாலும், நான் திற மையாகச் செயற்பட்டிருந்தாலும் ஊடகவிய லாளர் என்ற பதவிநிலையைக் கடந்து இது வரையிலும் எனக்கு எந்தவிதமான பதவியு யர்வுகளும் கிடைக்கவேயில்லை. ஊடகத் துறையில் எவ்வளவு தூரம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டும் இவ்வாறான பதவியுயர்வுகள் கிடைக்காமல் இருப்பது தொடர்ந்தும் பணி யிலிருப்பதற்குத் தடையாக இருக்கின்றது" எனப் பதிலளித்திருந்தார் ஊடகவியலாளர் ஒருவர்.

பதவியுயர்வுகள் பால்நிலையை அடிப்படை யாகக் கொள்ளாது அனுபவம், உற்பத்தித் திறன், ஆற்றல் மற்றும் பணியாற்றல் என்ப வற்றின் அடிப்படையில் அமைய வேண்டும் எனத் தொலைக்காட்சியில் பணிபுரியும் பெண் ஊடகவியலாளர் பதிலளித்திருந் தார். மேலும், வெளிப்படைத்தன்மை மிக்க நேர்முகப்பரீட்சை மற்றும் தெரிவுச் செயன்முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நியாயமான ஒரு பதவியுயர்வினை உறுதிப்படுத்துவது அவசியம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வினாவிற்குச் சற்று வித்தியாசமாக “பதவியுயர்வுகள் தமது பொறுப்புக்களை அதிகப்படுத்தும் என்பதால் அதனை விரும் பியே ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில், குடும்பப் பொறுப்புக்களுடன் இணைத்து அவற்றை மேற்கொள்ள முடியாது” என்ற காரணத்தினை குடும்பப் பொறுப்புக்கள் நிறைந்ததும், திருமணமானதுமான ஊடக வியலாளர்கள் கூறியிருந்தனர்.

பெண் ஊடகவியலாளர்களது பதவி உயர்வு களுக்கு அவர்களது குறைவான கல்வித் தகைமைகளே தடைகளாக இருக்கின்ற சந்தர்ப்பங்களையும் இங்கு ஆய்வாளரால் அவதானிக்க முடிகின்றது. சில பெண் ஊடக வியலாளர்கள் பதவி உயர்வுகளைத் தமது தரப்பிலிருந்தே நிராகரித்திருப்பதையும் அறிய முடிகின்றது. குறிப்பாக, பதவியுயர்வு கள் அவர்களுக்குரிய பொறுப்புக்களை அதி கப்படுத்தி, குடும்பத்துடன் இணைத்து அதனை ஒருங்கே கொண்டு பயணிக்க முடியாமல் இருக்கும் என்பதால் வேண்டு மென்றே அவற்றை ஏற்றுக்கொள்ளாத சந் தர்ப்பங்களைப் பெண் ஊடகவியலாளர்களிட மிருந்து அதிகம் அவதானிக்க முடிகின்றது.

**ஊடகம் சார்ந்து பிரச்சினைகளை வெளிப்படுத்தக்கூடிய களங்கள்**

ஊடகங்களில் பணிபுரியும் பெண்களாக ஏற்படும் பிரச்சினைகளை வெளிப்படுத்தக் கூடிய களங்கள் இருப்பதாக 25 சதவீதத் தினரும், இல்லை என 35 சதவீதத்தினரும், களங்கள் இருந்தாலும் பிரச்சினைகளைப் பகிரங்கப்படுத்துவதில்லை என 40 சதவீதத் தினரும் தமது பதில்களைக் குறிப்பிட்டுள் ளனர். இதன் பிரகாரம், ‘களங்கள் இருந் தாலும் பிரச்சினைகளைப் பகிரங்கப்படுத்துவ தில்லை’ என 40 சதவீதத்தினர் கொண்டுள் ளமை அதிகரித்த பெறுமானமாக கண்டறியப் பட்டுள்ளது.

ஊடகப்பணி சார்ந்து ஏற்படும் பிரச்சினை களை வெளிக்கொணருவதற்குரிய பொறுப் பான பதவிகளில் பெண்களை நியமிக்காத பட்சத்தில் தமது பிரச்சினைகளை வெளிப் படுத்த முடியாத நிலையில் பெண் ஊடக வியலாளர்கள் இருக்கின்றார்கள் என்பது அறியக்கிடைத்தது. பெண் ஊடகவியலாளர் களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் பட்சத்தில் தீர்வுகளைப் பெற்றுத்தர நினைப் பவர்கள் பிரச்சினைகளைப் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை எனவும், ஊடகப் பணியிலுள்ள பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்தால் பிரச்சினைகள் மீண்டும் தேவையற்று இரட்டிப்பாகும் என்ற கார ணத்தினால் பிரச்சினைகளை வெளிக் கொணர முன்வருவதில்லை எனவுமான கருத்துக்களை அதிகமான பெண் ஊடக வியலாளர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். பதிலளித்த அனைவரும் ஊடகக் களங்கள் மீது நம்பிக்கையற்ற தன்மையைக் கொண் டிருப்பதாகக் கருத்துக் கூறியிருந்தார்கள். இவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறான ஊடகக் களங்களில் காணப் படும் உயர்மட்ட அரசியல் மற்றும் உயர் பதவியிலுள்ளவர்களின் சுயநலப் போக்கு களையும் தெளிவுபடுத்தியிருந்தார்கள்.

**ஊடகம்சார் பணிகளில் ஊடக நிறுவனத்திற்குள் சுதந்திரமாகச் செயற்பட முடிதல்**

அடையாளங்காட்ட விரும்பாத பெண் ஊடக வியலாளர் ஒருவர் “ஒரு முறை மிக முக்கிய அரசியல் தலைவர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்தபோது புகைப்படங்கள் எடுத்தோம். அதில் நானும் எடுத்துக்கொண்டேன். நான் அந்தப் புகைப்படத்தை முகப்புத்தகத்தில பதிவேற்றினன். எனது புகைப்படத்தை எடுத்து ஊடக நிறுவனத்திற்குள் சிரேஷ்ட ஊடகவிய லாளர்கள் எனச் சொல்லப்படுகின்ற ஒரு சிலர் எனக்கும் அந்த அரசியல் தலைவருக் கும் தவறான உறவு இருக்கு எனச் செய்தி களைப் பரப்பினார்கள். இதனால் நிறைய மன உளைச்சலுக்கு உள்ளாகினேன்” எனத் தனது அனுபவத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

மேலும், இவ் வினாவிற்கு பதிலளித்த இன்னு மொரு பெண் ஊடகவியலாளர் “நான் ஆரம் பத்தில ஒரு தேசிய பத்திரிகையில வேலை செய்யும்போது வடக்கு மாகாணத்துக்கு எண்டு தனிய ஒரு பக்கம் இருந்தது. நாங் கள் இங்க இருந்து வடக்குக்கு உரிய பக் கத்திற்கு செய்தி அனுப்பினா, அதுக்குரிய

ஆசிரியர் பெரும்பாலான எனது கட்டுரைகள நிராகரிச்சுக்கொண்டே இருப்பார். ஏன் இதை நிராகரிக்கிறீங்க எண்டு கேட்டா, இதெல்லாம் திருத்திக்கொண்டு இருக்கேலாது எனப் பதில் வரும். இதைப் பற்றி மேலும் கேள்வி கேட்டா திமிரல என்னட்ட கேள்வி கேட்காத எண்டு சொல்லுவார். இதெல்லாம் தங்களை மீறி மேல வந்திடுவம் எண்ட ஆணாதிக்க சிந்தனை என்றே சொல்ல வேண்டும்" என்றார். இவ்விதம் தமது மேலதிகாரிகளினாலோ அல்லது சக ஆண் ஊடகவியலாளர்களினாலோ பெண் ஊடகவியலாளர்களால் பல சந்தர்ப்பங்களிலும் நிறுவனத்திற்குள்ளே சுதந்திரமாக இயங்க முடியாத நிலையிருப்பதை அறியமுடிந்தது.

ஊடக நிறுவனங்களுள் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாமையினால் சில விடயங்கள் காலதாமதம் அடைவது தங்களால் சுதந்திரமாகச் செயற்பட முடியாமைக்கான காரணமாக மற்றும் சில அடையாளங்காட்ட விரும்பாத பெண் ஊடகவியலாளர்கள் கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

ஊடகம்சார் பணிகளில் உங்கள் ஊடக நிறுவனத்திற்குள் சுதந்திரமாக செயற்பட முடியாமைக்கான காரணங்களில் ஒன்றாக, 'சக பெண் ஊடகவியலாளர்களுடனான ஆரோக்கியமற்ற போட்டித்தன்மை' என்ற விடயத்தையும் சிலர் முன்வைத்திருந்தனர்.

பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் நிறுவனங்களில் சுதந்திரமாகச் செயல்பட முடியாமைக்கான காரணங்கள் குறித்துப் பெறப்பட்ட தரவுகள், பல முக்கியமான கருப்பொருள்களை வெளிப்படுத்துகின்றன. இந்த நேர்காணல்கள் மூலம், பணியிடத்தில் பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் அதிகார ஏற்றத்தாழ்வுகள் ஆழமாக வேரூன்றியுள்ளன என்பது தெளிவாகிறது.

முதலாவதாக, ஒரு பெண் ஊடகவியலாளர் தனதுபுகைப்படத்தைப்பயன்படுத்திதவறான செய்திகளைப் பரப்பிய சம்பவம், ஊடக நிறுவனங்களுக்குள் இருக்கும் பாதுகாப்பற்ற மற்றும் நம்பகத்தன்மையற்ற சூழலை எடுத்துக்காட்டுகிறது. இது, சக ஊழியர்களே ஒரு பெண்ணின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் அளவுக்குச் சென்றிருப்பதைக் காட்டுகிறது. இது போன்ற செயல்கள், பெண் ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தையும், நம்பிக்கையின்மையையும் உருவாக்கும். இதன் விளைவாக, அவர்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், புதிய முயற்சிகளை எடுக்கவும் தயங்கலாம்.

இரண்டாவதாக, வட மாகாண செய்திகளை வேண்டுமென்றே நிராகரித்த ஆசிரியர் பற்றிய கருத்து, நிறுவனங்களில் நிலவும் பிராந்திய மற்றும் பாலினப் பாகுபாட்டை வெளிப்படுத்துகிறது. ஒரு பெண் ஊடகவியலாளர் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தின் செய்திகளைச் சேகரித்து அனுப்பியும், அவை தொடர்ந்து நிராகரிக்கப்படுவது, அவரது தொழில்முறை திறமையை கேள்விக்குள்ளாக்குகிறது. மேலும், கேள்வி கேட்டால் ஆணவத்துடன் பதிலளிப்பது, அதிகாரத்தில் இருக்கும் ஆண்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிப்பதைக் காட்டுகிறது. இது போன்ற ஆணாதிக்க மனோபாவம், பெண் ஊடகவியலாளர்களின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக உள்ளது.

மூன்றாவதாக, தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாமை மற்றும் அதனால் ஏற்படும் காலதாமதங்கள், பெண் ஊடகவியலாளர்களுக்கு நிறுவனத்தில் குறைவான அதிகாரம் மற்றும் செல்வாக்கு இருப்பதைக் குறிக்கிறது. அவர்களின் கருத்துகளுக்கும், முடிவுகளுக்கும் உரிய மரியாதை அளிக்கப்படாதபோது, அவர்கள் தங்கள் பணிகளை திறம்படச் செய்ய முடியாது. இது, நிறுவனத்தின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறனையும் பாதிக்கிறது.

இறுதியாக, சக பெண் ஊடகவியலாளர்களுடனான ஆரோக்கியமற்ற போட்டித்தன்மை பற்றிய கருத்து, பணியிடத்தில் நிலவும் அழுத்தமான சூழல் மற்றும் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான போராட்டத்தை பிரதிபலிக்கிறது. இது, பெண்களுக்குள் ஒற்றுமை குறைவதற்கும், ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும் மனப்பான்மை இல்லாததற்கும் வழி

வகுக்கலாம். இது, ஒட்டுமொத்தமாக பெண் ஊடகவியலாளர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக அமையும்.

ஆக, இந்த நேர்காணல் தரவுகள் ஊடக நிறுவனங்களில் பெண் ஊடகவியலாளர்கள் பல்வேறு வகையான பாலின அடிப்படையிலான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதை தெளிவாகக் காட்டுகின்றன. பெண் ஊடகவியலாளர்கள் குறித்து தவறான செய்திகளைப் பரப்புதல், ஆணாதிக்க மனோபாவம், குறைவான அதிகாரம், மற்றும் ஆரோக்கியமற்ற போட்டித்தன்மை போன்ற காரணிகள், அவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் பணிபுரிவதற்கு பெரும் தடைகளாக உள்ளன. இந்தச் சிக்கல்களைக் களையவும், பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தவும் ஊடக நிறுவனங்கள் முறையான கொள்கைகளை வகுத்து, அவற்றை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

### தொடர்புடைய கற்கைகளுக்கான வெளி

சான்றிதழ் கற்கை, தகைமைச் சான்றிதழ், உயர் தகைமைச் சான்றிதழ், பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு, உயர் ஆய்வுநிலைக் கற்கை ஆகியவற்றிற்கான வெளி வட பிராந்திய பெண் ஊடகவியலாளர்களுக்குச் சந்தர்ப்பமாக அமைவதற்கான காரணங்களைப் பின்வருமாறு ஊடகவியலாளர்கள் முன்வைத்திருந்தனர்.

இவ்வாறான வெளி மூலம் கால மாற்றத்திற்கேற்ப ஊடகத்துறைசார் புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடியும் என்ற கருத்தினை ஐந்து பெண் ஊடகவியலாளர்களும், நவீன ஊடகப்பணிசார் தொழில் நுட்பங்களைக் கற்க முடியும் என்ற கருத்தினை அதிகளவானோரும் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

ஊடக நிறுவனங்களில் பணிபுரியும்போது மேலதிகக் கல்வித்தகைமையைக் கொண்டிருக்கும் போது ஊதிய அதிகரிப்புக்கு அது வாய்ப்பைத் தருவதாகவும், பதவியுயர்வுக்கு வழிவகுப்பதாகவும், அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், புதிய ஊடகம் என அனைத்து ஊடகங்களிலும் அதனால் சிறந்து விளங்க முடியும் எனவும் ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

### சமூகம்சார் சந்தர்ப்பங்களும் சவால்களும்

#### பணி நிமித்தம் சமூகத்தினரால் மதிக்கப்படும் நிலை

“ஆரம்ப காலங்களில் நாங்கள் ஊடகவியலாளர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் எமக்கான மரியாதை சமூகத்தில் கிடைத்திருந்தது. ஆரம்பத்தில் மிகப் பெரியதொரு வரவேற்பு இருந்தது. இப்போது ஒருவித தயக்கத்துடனேயே அணுகுகிறார்கள்” என ஐந்து வருடங்களுக்கு மேல் பணிபுரிந்துகொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள் தமது பதில்களை வெளிப்படுத்தியிருந்தார்கள். பெண் ஊடகவியலாளர்கள் என்ற ரீதியில் பணி நிமித்தம் சமூகத்தினரால் மதிக்கப்படும் நிலை குறித்து ‘உயர்வானதல்ல’ என்பதற்கு ஊடகவியலாளர்களால் பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

ஊடகத்துறையை ஆண்களுக்குரிய பணியாகவே சமூகம் நினைக்கின்றது என்பதான கருத்தை இரண்டு பெண் ஊடகவியலாளர்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். அவர்களில் ஒருவர் “ஊடகத்துறையில் பணிபுரியும் பெண்கள் குடும்ப வாழ்க்கைக்குப் பொருத்தமானவர்கள் இல்லை என்ற சமூக எண்ணப்பாங்கு உள்ளது” எனத் தெரிவித்திருந்தார். பிறரின் கருத்துக்களை செவிமடுக்காது தன்னிச்சையாக செயற்படுபவள் என்ற மனப்பாங்கு சமூகத்தில் இருக்கின்றது என்பதாக வேறு பெண் ஊடகவியலாளர்கள் இருவர் கருத்துக்களை முன்வைத்திருந்தனர். ஊடகத்துறை இரவு நேரப்பணியையும் கணிசமானளவு உள்ளடக்கியிருக்கின்றது என்பதனால் ஊடகப் பணியை சவாலுக்குரியவர்களின் பணியென்பதாகவும், பெண்கள் ஊடகவியலாளர்களாக இருந்தால் அவர்களது கருத்துக்கள் அதிகாரத் தொனியுடனும், மெத்தனப் போக்கு டனும் இருக்கும் எனவும் சமூகத்தின் பிரதி பலிப்பு இருந்துவருவதாக ஆரம்பகால ஊடகவியலாளர்களும், சமகால ஊடகவியலாளர்களும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

"ஊடகத்தில் பெண்கள் பணிபுரிவதை ஆரம் பத்தில் சமூகம் ஒரு தவறான கண்ணோட் டத்தோட பாத்திச்சு. ஏனென்டா, ஊடகத்தால் பல பிரச்சினைகள் உருவாகுவதாக சமூகம் நம்பியது. இப்ப எவ்வளவோ புரிதல்கள் சமூகத்துக்கு வந்திட்டுது. உண்மையில், பிறழ்வுகள், பிரச்சினைகள் உருவாகாமல் இருப்பதும் எங்களது கைகளிலும் தங்கி யுள்ளது. எதையும் உடைத்தெறியலாம்' என பத்து வருடங்களுக்கும் மேலாகப் பணிபுரியும் ஊடகவியலாளர் பதிலளிக்கின்றார்.

"யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஊட கத்துறையில் பெண்களுக்கு சந்தர்ப்பங்கள விட சவால்களே கூடுதலாக இருக்குது. எப்பிடி சொல்லுறதென்டா, இந்தச் சமூகமே வாய்ப்ப தந்திட்டு, ஒரு கட்டத்தில அதுவே தட்டிப் பறிக்கும். தீவிரமான செயற்பாடு அல்லது ஒரு நோக்கம் குறித்த உண்மையான செயற்பாட்டுடன் இயங்கத் தடையாக சமூ கத்தினரே இருப்பார்கள். முதலாவது பிரச் சினை எங்கட யாழ்ப்பாணத்த பொறுத்த வரைக்கும் பொம்பிளப் பிள்ளைகள் வேலை எண்டு வெளியில திரிஞ்சாலே 'ஆட்டக்காரி' எண்ட பெயரில சொல்லுவாங்கள். உங்களுக் கான எதிர்ப்பு முதல் குடும்பத்தில, வீட்டுக் காரங்களிட்ட இருந்தே தொடங்கும்" என பதிலளிக்கின்றார் சிரேஷ்ட ஊடகவியலாளர்.

இதற்குச் சற்று மாறான விதத்தில், "நான் திரையில் (screen) தோன்றுவதால் என்னை மக்கள் இலகுவில் அடையாளங் கண்டுகொள் கின்றார்கள். என்னிடம் வந்து என் திறமை களைப் பாராட்டுவார்கள். அவர்கள் தன் வீட்டுப் பிள்ளை போல் பார்ப்பதை உணர் கின்றேன்" எனப் பதிலளிக்கின்றார் இளம் ஊடகவியலாளர். "எனது ஆரம்ப காலம் தொட்டு வானொலிச் சேவைகளில் இயங்கி வருவதால் எனது குரல் மாத்திரமே மக்களுக் குத் தெரியும். சிலருக்கு மாத்திரமே என்னைத் தெரியும் மூத்த ஊடகவியலாளர் என்ற மதிப்பு சமூகத்தில் இருப்பதாக உணர்கின்றேன்" எனப் பதிலளிக்கின்றார் சிரேஷ்ட வானொலி அறிவிப்பாளர்.

"நான் ஊடகத்தில் பணிபுரிகின்றேன். ஆனால், எந்த இடத்திலும் என்னை திரை யிலோ (screen) வெளியில் ஊடகக்களத் திலோ பார்க்க முடியாது. நான் என்னை அடையாளங் காண்பிக்காது இருப்பதால் சமூகத்தின் பார்வை குறித்த புரிதல் நேர் மறையாகவே இருக்கின்றது" என ஒத்த கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

ஒட்டுமொத்தத்தில், இவ்வாறான கருத்துக் கள் நிலவுவதற்கும் வெளிப்படுத்தப்படுவதற் கும் ஆணாதிக்கச் சமூகச் சிந்தனைகள் கார ணமாக இருக்கலாம். ஊடகவியலாளர்கள் கேள்விகளைக் கேட்பவர்கள், பிழைகளைச் சுட்டுக்காட்டுபவர்கள், அநீதிகளை எதிர்த்து நிற்பவர்கள் என்ற பிரதிமைகள் சமூகத்தில் இருப்பதனால், இப்பண்புகளைப் பெண்களு டன் மாத்திரமே பொருந்துகை செய்து, இயல்பு வாழ்க்கையுடன் இணைத்துப் பார்ப்ப தனால் தவறான கற்பிதங்கள் சமூகத்தில் எழுந்திருக்கவும் நிலைத்திருக்கவும் முடியும்.

**சட்ட ஏற்பாடுகள் பற்றிய புரிதல்கள்**

சுதந்திர ஊடகச் செயற்பாடுகளை முழுமை யாகவோ அல்லது பகுதியாகவோ பலவீனப் படுத்துகின்ற பல்வேறு விதமான சட்டங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. ஊடக வியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தர வாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்கள் தொழிலை உடல் சார்ந்தும் மற்றும் உளரீதியாகவும் ஒருமுகப்படுத்தி, சுயாதீன மாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயா தீனச் சூழல் ஆகும். இது ஊடக சுதந் திரத்தின் அடிப்படைக் காரணியாகவும் காணப்படுகின்றது. அதேசமயம், ஊடக சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற் றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர் விளைவுகளை அல்லது தனது பாதுகாப் பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்நோக் காமல் சுதந்திரமாக தனது கருத்தை வெளிப் படுத்தும் சூழலும் இருக்க வேண்டும்.

இவ்விடயம் குறித்து பதிலளித்திருந்த வட பிராந்தியப் பெண் ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் தாம் தொழில் நிமித்தம் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படும் நிலை

இருப்பதாகக் கூறுவதில் திருப்தியில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்கள். ஊடகங்களில் குறிப்பிட்டதொரு விடயமானது அரசாங்கத் திற்கோ அல்லது ஆளுந்தரப்பைச் சார்ந்தவர் களுக்கோ சிக்கலானதாகக் காணப்படும் பட்சத்தில் தொடர்ச்சியாக ஆட்சி செய்த அர சாங்கங்கள் பல தசாப்தங்களாகக் குற்ற வியல் அவதூறுச் சட்டத்தின் கீழும், இன்னபிற சட்டங்களின் கீழும் நடவடிக்கை களை மேற்கொண்டன. இதனால் ஊடகவிய லாளர்கள் சுதந்திரமாகத் தமது பணியை முன்னெடுக்க முடியாமல் உள்ளது என அதிகமானோர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

"தற்போது எமது கருத்துச் சுதந்திரம் பல்வேறு முறைகளில் பறிக்கப்படுகின்றது. நாம் கண்காணிக்கப்படுகின்றோம். சமூக வலைத்தளங்கள் கூட உற்றுநோக்கப்படு கின்றன. இது பொதுவாக ஊடகவியலாளர் களுக்கான பாதுகாப்பின்மையை வெளிப் படுத்துகின்றது" எனத் தொலைக்காட்சியில் தீர்மானமெடுக்கும் நிலையிலுள்ள பெண் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்திருந் தார். "ஊடக சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட் டிருந்தாலும் ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்குரிய பயன்தரும் விடயமாக தகவலறியும் உரிமைச் சட்டத்தினை நான் பார்க்கின்றேன். ஊழல்களை இதன் மூலம் வெளிப்படுத்தி உண்மைகளை வெளிக் கொணர முடியும் என நம்புகின்றேன். ஆனாலும், இச்சட்டத்திலும் சில மட்டுப் பாடுகள் இருப்பது வினைத்திறனான ஊடக அறிக்கையிடலுக்குத் தடையாக இருப்பதை நான் உணர்கின்றேன்" என அச்சு ஊடகத்தில் பணிபுரியும் ஊடகவியலாளர் கூறுகின்றார்.

தற்போதும் சில ஊடக நண்பர்கள் பயங் கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய் யப்படுகின்றார்கள். தகவல் சேகரிப்பில் ஈடு படுகின்றபோது ஆயுதக்குழுக்களால் மிரட்டப் படுவது அல்லது பொலிஸாரால் கைது செய் யப்படுகின்ற நிலைமைக்கு அவர்கள் உள் ளாகின்றனர். ஊடகவியலாளர்களைப் பாது காப்பதற்கென்று இலங்கையில் சட்டங்கள் எதுவும் இதுவரையிலும் நடைமுறையில் இல்லை எனவும் இருக்கும் பொறிமுறை களும் போதுமானதாக இல்லை என்றும் தமது கருத்துக்களை வடபிராந்தியப் பெண் ஊடக வியலாளர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

ஊடகவியலாளர் ஒருவர், "எனக்கு இணைய வழியிலான அச்சுறுத்தல்கள் ஏற்படும்போது அவற்றை இலகுவில் கண்டுபிடித்து சரிசெய் வதற்கு வெளிநாடுகளைப் போன்று உட னடித் தீர்வு கிடைக்காது என்பதால் காவல் துறையின் இணையவழிக் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு (Police Cyber Crime Prevention Division) முறையிடவில்லை. ஏனெனில், அது நேரத்தை வீணடிக்கும். பணச்செலவு அதிகம். ஆதலால், நான் பெரும்பாலான விடயங்களை அப்படியே விட்டுவிட்டேன்" என்கின்றார்.

அண்மைக் காலங்களில் அதிகரித்துவரும் இணையவழிக் குற்றங்களை, அச்சுறுத்தல் களை சரி செய்வதற்கும், எதிர் நடவடிக்கை களைத் துரித முறையில் மேற்கொள்ளக் கூடியதுமான பொறிமுறை ஒன்று நாட்டிற்கு அவசியம் என்பதைப் பெண் ஊடகவிய லாளர்கள் வெளிப்படுத்துகின்றார்கள். இவ் விடயம் குறித்துப் பதிலளித்திருந்த பெண் ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் தம்மைத் தொழில்நிமித்தம் சட்டரீதியாகப் பாதுகாக்கும் இணையவழிக் குற்றங ஏற் பாடுகளில் திருப்தியில்லை எனக் குறிப் பிட்டிருந்தார்கள்.

தற்காலத்தில் அரசுக்கெதிராகவோ அல்லது அமைப்புக்களுக்கெதிராகவோ அல்லது தனி நபருக்கெதிராகவோ ஊடகவியலாளர்கள் செய்திகளை வெளியிடும்போது கூர்ந்து அவதானிக்கப்படுகின்றார்கள். அது இணைய வழிக் குற்றங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் வரை நீண்டுசெல்கின்றது. இன்றைய காலத் தில் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறைகளை எதிர்பார்த்திருப்பது இம்முடிவை அவர்கள் வெளிப்படுத்தக் காரணமாக இருந்திருக்க லாம்.

பெண் ஊடகவியலாளர்கள் இலங்கையில் நிலவும் சட்ட ஏற்பாடுகள் மற்றும் அவற் றின் தாக்கங்கள் குறித்து தெரிவித்த கருத் துகள், ஊடக சுதந்திரத்திற்கும், பத்திரிகை

யாளர்களின் பாதுகாப்பிற்கும் உள்ள சவால் களை ஆழமாக வெளிப்படுத்துகின்றன. இந்த நேர்காணல்கள் மூலம், தற்போதுள்ள சட்ட framework ஊடகவியலாளர்களுக்கு போதுமான பாதுகாப்பை வழங்கவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், அவர்களின் சுதந்திரமான செயல்பாட்டிற்கு தடையாகவும் உள்ளது என்பது தெளிவாகிறது.

வடபிராந்திய பெண் ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர், தாங்கள் தொழில் நிமித்தம் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படும் நிலையில் திருப்தியடையவில்லை என்று கூறியிருப்பது அவதானிக்கக்கூடிய விடய மாகும். பல தசாப்தங்களாக குற்றவியல் அவதூறுச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின்கீழ் அரசாங்கங்கள் ஊடகவியலாளர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பது, அவர்கள் சுதந் திரமாக தங்கள் பணியை முன்னெடுப் பதற்கு பெரும் தடையாக இருந்துள்ளது. அரசாங்கத்திற்கோ அல்லது ஆளுந்தரப் பைச் சார்ந்தவர்களுக்கோ சிக்கலான செய்தி களை வெளியிடும்போது ஏற்படும் இந்த அச்சம், சுய தணிக்கைக்கு வழிவகுத்து, பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய முக் கியமான தகவல்கள் மறைக்கப்படலாம்.

ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டதுபோல, ஊடகவியலாளர்கள் கண்காணிக்கப்படுவது மற்றும் சமூக வலைத்தளங்கள்கூட உற்று நோக்கப்படுவது, ஒட்டுமொத்த ஊடகச் சமூகத்திற்கானபாதுகாப்பின்மையைவெளிப் படுத்துகிறது. கருத்துச் சுதந்திரம் பல்வேறு வழிகளில் பறிக்கப்படுவது, ஜனநாயக சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல. ஊடக வியலாளர்கள் அச்சமின்றி தங்கள் கருத் துக்களை வெளியிட முடியாத சூழ்நிலை நிலவுவது, தகவலின் சுதந்திரமான ஓட்டத்தை தடுக்கிறது. பொதுவில் ஊடகவியலாளர்கள் தகவலறியும் உரிமைச் சட்டத்தை ஒரு பய னுள்ள கருவியாகப் பார்த்தாலும், அதிலுள்ள மட்டுப்பாடுகள் வினைத்திறனான ஊடக அறிக்கையிடலுக்கு தடையாக இருப்பதாகக் குறிப்பிடுவது முக்கியமானது. ஊழல்களை வெளிக்கொணர்வதற்கும், உண்மைகளை வெளிப்படுத்துவதற்கும் இந்தச் சட்டம் ஒரு வாய்ப்பாக இருந்தாலும், அதன் குறை பாடுகள் முழுமையான சுதந்திரத்தையும், செயல்திறனையும் கட்டுப்படுத்துகின்றன.

தற்போதும் சில ஊடகவியலாளர்கள் பயங் கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய் யப்படுவது மற்றும் தகவல் சேகரிப்பில் ஈடு படும்போது ஆயுதக்குழுக்களால் மிரட்டப் படுவது அல்லது பொலிஸாரால் கைது செய் யப்படுவது போன்ற சம்பவங்கள், ஊடகவிய லாளர்களின் பாதுகாப்பின்மைக்கு மேலும் சான்றளிக்கின்றன. இலங்கையில் ஊடகவிய லாளர்களைப் பாதுகாப்பதற்கென்று போது மான சட்டங்கள் அல்லது நடைமுறைகள் இல்லை என்ற கருத்து, இந்தச் சிக்கலின் தீவிரத்தை உணர்த்துகிறது.

இணையவழி அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளும்போது காவல்துறையின் இணைய வழிக் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு முறையிட தயங்குவது, தற்போதுள்ள சட்ட அமலாக்க அமைப்பின் குறைபாடுகளை எடுத்துக்காட்டு கிறது. உடனடி தீர்வு கிடைப்பதில்லை, நேர விரயம் மற்றும் பணச் செலவு அதிகம் என்ப தால் புகாரளிக்காமல் விடுவது, இணைய வழி குற்றங்களுக்கு எதிராக ஊடகவிய லாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லை என்பதைக் காட்டுகிறது.

அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் இணையவழி குற்றங்கள் மற்றும் அச்சுறுத் தல்களை சரிசெய்வதற்கும், துரித நட வடிக்கை எடுப்பதற்கும் ஒரு பொறிமுறை நாட்டின் அவசியத் தேவையாக பெண் ஊடகவியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகள் இணையவழி குற்றங்களிலிருந்து தங்களைப் பாதுகாக்க போதுமானதாக இல்லை என்ற அவர்களின் கருத்து, இந்தச் சிக்கலின் அவசரத்தை உணர்த்துகிறது.

முடிவாக, ஊடகவியலாளர்கள் அரசுக்குஎதிரா கவோ, அமைப்புகளுக்கு எதிராகவோ அல் லது தனிநபர்களுக்கு எதிராகவோ செய்தி களை வெளியிடும்போது கூர்ந்து அவதானிக் கப்படுவது மற்றும் இணையவழி அச்சுறுத் தல்கள் வரை நீள்வது, அவர்களின் பாது

காப்பிற்கான உடனடி மற்றும் நம்பகமான பொறிமுறைகளின் அவசியத்தை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது. பெண் ஊடகவிய லாளர்களின் இந்த கருத்துகள், இலங்கையில் ஊடக சுதந்திரத்தையும், பத்திரிகையாளர் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த சட்ட மற்றும் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலுவாக எடுத் துரைக்கின்றன.

#### செய்திகளைச் சேகரிப்பதிலுள்ள அணுகுந்தன்மை

வடபிராந்தியப் பெண் ஊடகவியலாளர்கள் செய்திகளைச் சேகரிக்கும் தமது பணியின் நிமித்தம் தனிநபரிடமோ அல்லது ஒரு சமூகக் குழுவினரிடமோ ஊடாட வேண்டியுள்ளது. இங்கு ஒரு பெண், ஊடகவியலாளராக இருக் கும் பட்சத்தில் செய்திகளைச் சேகரிக்கும் பொருட்டு - 'பெண்' எனும் காரணத்தினால் தகவல்களைப் பெறுவதற்கு அதிகளவில் மறுக்கப்படுகின்றாரா அல்லது அதற்கு அனுமதிக்கப்படுகின்றாரா என்பதும் ஆரா யப்படுகின்றது. ஏனெனில், பெண்கள் குறித்து சமூகம் கொண்டுள்ள பொதுவான பார்வை 'அவள் மென்போக்கானவள்' என்பதாகும். ஆகவே, இங்கு பெண் ஊடகவியலாளர் களாக தமது படைப்புக்களையோ அல்லது செய்திகளையோ சேகரிக்குமிடத்து எவ் வாறான சந்தர்ப்பங்களையும் சவால்களை யும் எதிர்கொள்ள நேரிடுகின்றது என்பது ஆய்வுக் குரியதாகும்.

செய்திகளைச் சேகரிக்கும் போதுள்ள அணு குந் தன்மை குறித்து கருத்துத் தெரிவித்த அதிகமான பெண் ஊடகவியலாளர்கள் தமது பணியின் பொருட்டு இவ்விடயத்தில் எவ்வித சவால்களையும் எதிர்கொள்ளவில்லை என வும், அரச நிறுவனங்களோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ அதிகப்படியான ஆதர வினைத் தருவார்கள். சில வேளைகளில் இருந்த இடத்திலிருந்து தகவல்களைப் பெற முடியுமானதாகக் கூட இருக்கும். பெண் கள்தானே என்று உதாசீனம் செய்வது கிடை யாது. பெண் ஊடகவியலாளர்கள் மீதான பார்வைமரியாதை உயர்வுடனேயே இருந்தது, இருந்துவருகின்றது என அதிகளவானோர் கருத்துக்களை பதிவுசெய்திருந்தனர்.

"சில வேளைகளில் குறிப்பிட்ட சில அலுவல கங்களிலிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்புக்களின் ஊடாக தாமாகவே தமது அலுவலகம், பணிகள் குறித்த செய்திகளைத் தருவார்கள். திருப்தியுடன் செய்திகளைச் சேகரித்த அனுபவங்களும் உண்டு" என பெண் ஊடகவியலாளர் ஒருவர் பதிலளித் திருந்தார்.. செய்தி சேகரிக்கும்போது ஒரு சில தடைகள் ஏற்பட்டிருப்பதாகவும், பெண் தானே என தாம் ஆரம்ப காலங்களில் புறக்கணிக்கப்பட்டதாகவும் சிலர் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

#### முடிவுரை

தரவுகளினுடைய பகுப்பாய்வினைத் தொடர்ந்து 'வடபிராந்திய ஊடகத்துறையில் பெண் ஊடகவியலாளர்கள்: தொழிற்றுறை சார்ந்த சவால்கள்' ஆய்வின் முடிவுகளாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

வடபிராந்தியப் பெண் ஊடகவியலாளர்கள் பணிசார்ந்து அதிகளவில் உளத்திருப்தி யையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கின் றார்கள். தொழில்சார் பாதுகாப்பு விடயத் தில் உரிய வேளைக்குச் வேதனம் கிடைக் கப்பெறுகின்றது. பெண் ஊடகவியலாளர் களுக்கு ஊடகத்துறைசார் பயிற்சிகள் மற்றும் தொழில்விருத்தி ஆகியன போதியளவில் கிடைக்கப்பெறுவதோடு, அவற்றின் மூலம் சிறந்த முறையில் அவர்கள் தகவமைக்கப் படுகின்றார்கள். இந்த ஆய்வானது, வட பிராந்திய ஊடகத்துறையில் பணிபுரியும் பெண் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் தொழிற்றுறை சார்ந்த சவால்கள் மற்றும் அவர்கள் அடையும் திருப்தி நிலைகள் குறித்து ஆராய்கிறது. ஆய்வின் முடிவுகள் பல முக்கிய நுண்ணறிவுகளை வெளிப்படுத்துகின்றன.

#### உளத்திருப்தி மற்றும் வாய்ப்புகள்:

வடபிராந்திய பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் பணியில் அதிக உளத்திருப்தியையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கின்றனர். சரி யான நேரத்தில் ஊதியம் கிடைப்பது தொழில்சார் பாதுகாப்பை உறுதி செய் கிறது. மேலும், ஊடகத்துறை சார்ந்த பயிற் சிகள் மற்றும் தொழில்விருத்தி வாய்ப்புகள்

அவர்களுக்கு போதுமான அளவில் கிடைப்பதன் மூலம், அவர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்ள முடிகிறது. சமூக அளவில் ஊடகக் கல்விக்கான வாய்ப்புகள் (உயர்கல்வி,பட்டப்பின்படிப்பு,பட்டயக்கல்வி) திருப்திகரமாக இருப்பது அவர்களின் அறிவு மற்றும் திறன்களை வளர்க்க உதவுகிறது. ஊடக நிறுவனத்திற்கு வெளியே அவர்கள் ஓரளவு சுதந்திரமாக செயல்பட முடிகிறது மற்றும் செய்தி சேகரிப்பின்போது அவர்கள் எதிர்கொள்ளும் அணுகுமுறை சார்ந்த சவால்கள் குறைவாகவே உள்ளன.

**முக்கிய அவதானிப்பு:**

பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் தொழிலில் திருப்தி அடைந்தாலும், தொழில்சார் வளர்ச்சி மற்றும் வெளிப்புறச் செயல்பாடுகளில் சில சாதகமான அம்சங்கள் இருந்தாலும், உள்ளார்ந்த மற்றும் வெளிப்புற தடைகள் அவர்களின் முழுமையான திறனை வெளிப்படுத்துவதற்கும், தொழிலில் முன்னேறுவதற்கும் தடையாக உள்ளன.

**ஊடகத் தொழிற்றுறை சவால்கள் மற்றும் தடைகள்:**

அதே நேரத்தில், பெண் ஊடகவியலாளர்கள் குடும்பத்தினரின் ஆதரவின்மை, போதுமான ஊதியமின்மை போன்ற குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர். தற்போதைய பொருளாதாரச் சூழலில் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அவர்களுக்கு பெரும் சுமையாக உள்ளது. மேலும், அவர்கள் தொழில்ரீதியாக அச்சுறுத்தல்களை, குறிப்பாக இணையவழி அச்சுறுத்தல்களை அதிகளவில் சந்திக்க நேரிடுகிறது. பாலின வேறுபாடுகள் காரணமாக பணியிடத்தில் பாதிப்புகளை எதிர்கொள்வதும், பதவி உயர்வு குறித்த அதிருப்தியும் அவர்களின் தொழில் வாழ்க்கையில் பின்னடைவை ஏற்படுத்துகிறது. பல்வேறு சவால்கள் காரணமாக சிலர் இந்தத் தொழிலைத் தொடர முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். சமூகத்தில் பிரச்சினைகளை வெளிப்படுத்த களங்கள் இருந்தாலும், பெண் ஊடகவியலாளர்கள் அவற்றைப் பகிரங்கமாகப் பேசத் தயங்குகின்றனர்.

**முக்கிய அவதானிப்பு:**

குடும்ப ஆதரவு இல்லாமை, குறைந்த ஊதியம், அச்சுறுத்தல்கள் (குறிப்பாக இணைய வழி), பாலின பாகுபாடு மற்றும் பதவி உயர்வு குறித்த அதிருப்தி ஆகியவை வடபிராந்திய பெண் ஊடகவியலாளர்களின் தொழில் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தடைகளாக உள்ளன. சமூகத்தில் பேச வாய்ப்புகள் இருந்தும், அவர்கள் தங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்த தயங்குவது, கூடுதல் உளவியல் மற்றும் சமூக அழுத்தங்களை ஏற்படுத்துகிறது.

**நிறுவனத்திற்குள் சுதந்திரமின்மை மற்றும் சட்டப் பாதுகாப்பின்மை:**

பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் ஊடக நிறுவனத்திற்குள் சுதந்திரமாக செயல்பட முடிவதில்லை. சமூகத்தின் பார்வையில் அவர்களின் பணிக்கு உரிய மதிப்பில்லை. மேலும், தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகள் காலாவதியானதாகவும், அவர்களுக்கு சாதக மற்றதாகவும் உள்ளன.

**முக்கிய அவதானிப்பு:**

ஊடக நிறுவனங்களுக்குள் முடிவெடுக்கும் அதிகாரம் குறைவாக இருப்பது மற்றும் சமூகத்தின் குறைவான மதிப்பும், போதுமானளவு சட்டப் பாதுகாப்பின்மையும் பெண் ஊடகவியலாளர்களின் தொழில் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்குகின்றன. சட்ட ஏற்பாடுகள் புதுப்பிக்கப்பட வேண்டியதும், சமூகத்தின் கண்ணோட்டம் மாற வேண்டியதும் அவசியமாகும்.

**ஒட்டுமொத்த முடிவு:**

வடபிராந்திய பெண் ஊடகவியலாளர்கள் தங்கள் தொழிலில் சில நேர்மறையான அம்சங்களைக் கொண்டிருந்தாலும், குடும்ப மற்றும் பொருளாதார அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள், பாலின பாகுபாடு, நிறுவனத்திற்குள் சுதந்திரமின்மை மற்றும் போதுமான சட்டப் பாதுகாப்பு இல்லாமை போன்ற பல சவால்களை எதிர்கொள்கின்ற

னர். இந்த சவால்களை எதிர்கொள்வதற்கும், ஊடகத்துறையில் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்கும் முறையான கொள் கைகள் மற்றும் சமூக மாற்றங்கள் தேவைப் படுகின்றன. பெண் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பான மற்றும் சுதந்திரமான பணிச் சூழலை உருவாக்குவதன் மூலம் மட்டுமே ஊடகத்துறை மேலும் வலுப்பெறும்.

**உசாத்துணைகள்**


தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், க.பொ.த (உயர்தரம்), (2019). ஆசிரியர் வழிகாட்டி, தேசிய கல்வி நிறுவகம்

சீதாரஞ்சனி, (2011), கருத்துக்கொலைக்கு இரையானோர், கொழும்பு: சுதந்திர ஊடக இயக்கம்,

ரகுராம்,சி. (2015). அபிவிருத்தித் தொடர்பாடல் மாற்று நோக்கி. கொழும்பு: சேமமடு பதிப்பகம்,

துவாரகன், சிறீஸ்கந்தராசா. (2016). முழுநேர ஊடகவியலாளர்களும் தொழில்சார் சவால் களும், சிறப்புக்கலைமாணிப் பட்டத்தின் பகுதித்தேவையை நிறைவுசெய்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பதிப்பிக்கப்படாத ஆய் வேடு, ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம்.

புஸ்பநாதன். அம்பலம், (2004). ஊழியர்களை வழிநடத்தல், வவுனியா: பொருளியல் முகாமைத்துவத் துறை, வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பொதுமக்கள் நம்பிக்கையினை மீளக்கட்டி யெழுப்புதல், (2016). இலங்கை: ஊடக மறு சீரமைப்புக்களுக்கான செயலகம்,

Chandraborty, Joy. Muktikam Hazarika & Arunima Gowswani. (2015). Engendering Media Participation: The Case of Women Journalism in Assam. India: University of Calcutta

https://www.academia.edu/125271109/Engendering_Media_Participation_The_Case_Of_Women_Journalists_In_Assam (access on 18.03.2021)

Safa, Mdnurus. (2015). The Challenges of Female Journalists in Bangladesh. China: Unpublished Research M.Phil, Central China Normal University.

https://www.researchgate.net/publication/285503295_Challenges_of_Female_Journalists_in_Bangladesh (access on 12.12.2023)

Swanson, Grace. (2016). The Leaky Pipeline between Journalism Students and Female Journalists: Reasons Women Stay and Leave Newsrooms. M.Phil. Unpublished Research, University of Washington.

https://com.uw.edu/wp-content/uploads/2021/08/GraceSwanson.pdf (access on 23.10.2022).

Mugwe, Rosemery, N. (2012). Challenges Facing women Media Practitioners in Kenya, M.Phil. Unpublished Research, University of Nairobi.

https://erepository.uonbi.ac.ke/server/api/core/bitstreams/e1afac26-4295-4c5d-af63-6342efcfc130/content. (access on 22.09.2022).

Inside the News (2015). UNESCO Bangkok Office, UN Women Regional Office for Asia the Pacific.

https://www.fmmsrilanka.lk/wp-content/uploads/2021/08/FMM_2021_Aug_Annual_Eng.pdf Viewed on 10.11.2024, 14:30pm

https://ldjf.org/assets/downloads/publications/mgc-sri-lanka.pdf - Gender discrimination viewed on 12.12.2024, 15:08 pm

https://www.cpalanka.org/wp-content/uploads/2007/8/Media_freedom_in_Sri_Lanka_2007.pdf viewed on 12.10.2024, 15:08 pm

https://cpj.org/2025/02/sri-lankan-top-prosecutor-seeks-to-discharge-key-suspects-in-journalists-murder/ Viewed on 06.11.2024, 13:10 pm.